"MATHAR MARUMANAM."

# மாதர் மறுமணம்



மலர் 3. இதழ் 3.

வெகுதானிய ஐப்பசி

Annas 1½ 10 Cts.

# "மாதர் மறுமணம்"
## விற்பனை ஏஜெண்டுகள்.

1. இந்தியன் நாஷனல் நியூஸ் மார்ட், 89 சர்ச் ஸ்ட்ரீட், ஸ்லேவ் அயலண்ட், கொழும்பு.
2. நியூஸ் மார்ட் சப் ஏஜெண்ட், 8, 9 வார்ட் ஸ்ட்ரீட், கண்டி.
3. நவீன கதா புத்தகசாலை, மங்கமாரி வீதி, ரங்கூன்.
4. மு. முகம்மதலி, 208-A சிலிகி ரோடு, சிங்கப்பூர்.

---

# "மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய உள்நாட்டுக்கு | ... | ரூ. | 1—0—0 |
| பர்மா, மலாயா, சைகோன், தென்னாபிரிக்கா முதலிய வெளிநாட்டுக்கு | ... | ரூ. | 1—8—0 |
| தனிப்பிரதி ... | ... | ரூ. | 0—1—6 |

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பணமாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2 ஷில்லிங் 6 பென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,

மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி.

# உள்ளுறை

கைம்பெண் (பாட்டு)
—வித்வான் S. உமைதாணு பிள்ளை .... 1
பெண்மக்கள் பட்ட துன்பங்கள்—வித்வான்
—V. R. பரமேசுவரன் பிள்ளை, P.O.L. .... 4
சதி மீட்சி—'கலா நேசன்' .... 7
விவாகமில்லாத விதவை .... 9
வஞ்சக உலகம்—S. சத்திய மூர்த்தி .... 17
கல்யாண விமரிசை .... 25
விவாக ரத்து—சோ ராம் .... 29
அன்புநாட்டில் அமங்கலையா (பாட்டு)
—சிவப்பிரகாசம் .... 34
இந்து மாதர் விண்ணப்பம் .... 35
"அவள் கதை" —N. M. R. ராமச்சந்திரன் .... 37
நிகழ்ச்சிகள் 41

# குமரன் புத்தகசாலை.

### வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

| | |
|---|---|
| மனம்போல வாழ்வு | 0-8-0 |
| திருக்குறள் (அறத்துப்பால்) | 1-0 0 |
| மெய்யறம் | 0-8-0 |
| சாந்திக்கு மார்க்கம் | 0-8-0 |
| அகமே புறம் | 0-8-0 |
| மெய்யறிவு | 0-8-0 |

### வ. வே. சு. ஐயர் எழுதியது.

| | |
|---|---|
| சந்திரகுப்த சரித்திரம் | 0-6-0 |

### மகேசகுமார சர்மா எழுதியது.

| | |
|---|---|
| வால்மீகி விஜயம் | 0-12-0 |

### இதர புத்தகங்கள்

| | |
|---|---|
| ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும் | 6-0-0 |
| நைடதம் மூலமும் உரையும் | 4-0-0 |
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| உப்பள முற்றுகை | 0-4-0 |
| பக்தியோகம் | 0-8-0 |
| தேவோபாசன தீபம் | 0-6-0 |
| பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை) | 0-4-0 |
| மநுநீதி மர்மம் | 0-2-0 |
| ரோமியோ ஜூலியட் (ஷேக்ஸ்பியர் நாடகக் கதை செய்யுள்) | 0-4-0 |
| இகபரஞானசாகரத் திரட்டு | 0-6-0 |
| பெரிய விக்கிரமாதித்தன் கதை | 1-0-0 |
| தாசிகள் மோச வலை (நாவல்) | 1-4-0 |
| நந்தனார் கீர்த்தனை | 0-4-0 |
| தோத்திரக்கோவை | 0-6-0 |
| இராமாயண ஆராய்ச்சி | 0 4-0 |
| சொர்னவல்லி | 0-12-0 |
| கூழைரங்கன் | 0-12-0 |
| அமிர்தவல்லிமாலை | 0-4-0 |
| நமது பலசரக்குக்கடை | 0-6-0 |
| நாயன்மார் | 0-3-0 |
| குட்டிச்சாத்தான் கட்டுரைகள் | 0-3-0 |
| பதிற்றுப்பத்தந்தாதி | 0-3-0 |
| மாதர் மறுமணம் | 0-4-0 |
| பத்மநாதன் அல்லது களவுபோன வைரப்பதக்கம் | 0-12-0 |
| மானநஷ்ட வழக்கு | 0-1-0 |
| ஜீவகாருண்யத்திருக்குறள் | 0-0.6 |
| ஜீவகாருண்யப் பாடல் திரட்டு | 0-3-0 |
| சந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ் மகள் | 0-2-0 |
| கைம்பெண்ணின் கண்ணீர் | 0-1-0 |
| தேசீய கீதங்கள் | 0-2-0 |
| காசில்லாமல் உபதேசம் | 0-1-0 |
| பலதிரட்டு | 0-1-0 |
| கடவுளும் கோயிலும் | 0-1-0 |
| சமரச சன்மார்க்க தோத்திரத்திரட்டு | 0-4-0 |
| சைவசமய சாரம் | 0-1-0 |
| சுயராஜ்யம் யாருக்கு | 0-1-0 |
| மாதர் மறுமணம் பாடல் திரட்டு | 0-2-0 |
| அநியாயக் கல்யாணம் | 0-0-6 |
| இரண்டு கட்டுரைகள் | 0-1-0 |
| தமயந்தி நாவல் | 0-8-0 |
| சோதிடப் புரட்டு | 0-2-0 |
| சுயமரியாதைத் தாலாட்டு | 0-2-0 |
| புராண ஆபாசங்கள் | 0-3-0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0-2-0 |
| சுயமரியாதைத் தத்துவ கீதங்கள் | 0-3-0 |
| சுயமரியாதைப் பாடல் | 0-2-0 |

**மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.**

# மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

| மலர் 3 | காரைக்குடி<br>வெகுதானிய-ஞு ஐப்பசி-மீ | இதழ் 3 |
| --- | --- | --- |

## கைம் பெண்

[வித்வான் S. உமைதாணு பிள்ளை, தேரூர்.]

(1) கணவனை யிழந்த கைம்பெண்ணைக்
கட்டி நாளுஞ் சிறையிட்டே
உணவு முடையும் அணியு மெலாம்
ஒருங்கே நாமும் விலக்குவது
பிணத்தொடு பிணமாய் எரிப்பதினும்
பெரிய தண்டனை யாகாதோ?
உணங்கி வாடும் அவர் நிலையை
உலகங் கண்டு வருந்தாதோ?

(2) கொழுநனை யிழந்த கைம்பெண்ணும்
கொள்ளா திந்த வாழ்க்கைக்குப்
பழுது பட்டா ளென்றே நாம்
பலரும் பழித்துக் கூறுவதால்
வழுவி விழுந்த கைம்பெண்ணை
வசைகள் சொல்லி வெறுப்பதனால்
அழுத அவர்கள் கண்ணீரும்
ஐயோ! நம்மைத் தொடருமம்மா.

(3) கண்ணீர் வடித்தே கைம்மைகளும்
கால மெல்லாங் கடுஞ்சிறையில்
எண்ணி யழியும் அவர்களது
ஏக்கம் போக்கி யெந்நாளும்

கண்ணைப் போல இவ்வுலகிற்
கனிவா யென்றும் காப்பவரே
மண்ணி லவர்தம் கடமைகளை
மாண்பா யென்றும் செய்பவராம்

(4) ஐயோ! இந்த கைம் பெண்ணின்
அழகும் இளமைக் காயிரமாய்
கையால் வாரி யிறைத்தாலும்
கண்ணால் நீயும் காண்பாயோ?
மெய்யா யிந்த விதவைகளின்
மெலிவை யெல்லா மெடுத்துரைக்கக்
கையைத் தட்டி யெழுகின்ற
காளையை நீயும் கண்டதுண்டோ?

(5) பெண்ணைப் படைத்த கையாலே
பெருமையாய் ஆணையும் படைத்ததினால்
மண்ணி லவரைப் போலிந்த
மாத ருலகும் மறுமணத்தை
எண்ணி யெண்ணி யெந்நாளும்
இன்ப வாழ்வை யெதிர்நோக்கி
கண்ணீர் வடிக்கும் கைம்பெண்ணைக்
காத்த லிளைஞர் கடமையம்மா

(6) குருட்டுத் தனமா யிவ்வுலகிற்
கொடிய மூட வழக்கமெலாம்
உருட்டும் புரட்டும் மிகக் கொண்டே
உளறி வைத்த சட்டமெலாம்
மருட்டும் பார்வை கைம்பெண்ணும்
மண்ணில் மாண்டே அழிந்திடவே
தெருட்டி முன்னோர் வைத்ததலால்
தெய்வச் செயலு மிதுவாமோ?

(7) படரும் கொம்பே யிளைஞரெனப்
பற்றி யதனைத் தாவுதற்குத்
தொடரும் கொடியாம் கைம்மைகளைத்
துயரம் போக்கி யணைப்பவரே
அடிமைத் தளையில் விடுபட்டே
அன்பர் மதிப்பை யடைந்தென்றும்
திடமை யான உடலோடு
தினமு மிங்கே வாழ்பவராம்

(8) வனத்தில் ரோஜா மலர்வதனுல்
வனத்திற் கேதும் பயனுண்டோ?
வனரோ ஜாவும் நிதம்வாடி
வனப்பை யிழந்தே யழிவதுபோல்
தினமு மிந்த கைம்பெண்ணும்
தேய்ந்து தேய்ந்து நலமிழந்து
மனதில் துயரம் மிகக்கொண்டு
மண்ணில் மாண்டு போகாரோ?

(9) கல்லைப் பொன்னுற் கட்டுமுனே
கவினை யதுவும் காட்டிடுமோ?
நல்ல பொருளின் கூட்டுறவால்
நாளும் அதுவும் பொலிவுறற்போல்
வல்லா னொருவன் கைப்பட்டு
வாழும் வாழ்வில் கைம்பெண்ணும்
எல்லை யில்லா இன்பமுடன்
என்று முலகில் வாழாரோ?

(10) மூடி யவரைச் சிறைசெய்து
மூலையி லிட்டுத் திருவேறக்
கோடி யளவாய் கைம்பெண்ணைக்
குவிப்ப திந்த உலகினிலே
தேடி வெடிக்கும் சுரங்கத்தைத்
திரிந்து நாளும் அலைந்தலைந்து

கூடி யடைந்தே அதன் மீது
குடியிருப் பதுவும் ஆகுமம்மா

(11) புதுமை பலது மெந்நாளும்
புவியிற் பூத்து வருகுதம்மா
விதவை மணமும் இந்நாளில்
விதவித மாக நடக்குதம்மா
மதுவெறி யெலாம் ஒழியுதம்மா
மகாத்மா ஒளியும் வீசுதம்மா
புதுயுகம் பூக்கப் போகுதம்மா
பூரண வாழ்வும் நெருங்குதம்மா.

---

# பெண்மக்கள் பட்ட துன்பங்கள்

வித்வான் V. R. பரமேசுவரன் பிள்ளை, P.O.L., நாகர்கோவில்

மலையாள நாட்டு அந்தணர்களை நம்பூதிரிமாரென்று அழைப்பது வழக்கம். அவர்கள் வடமொழியிலும் கீழ்நாட்டுக் கலைகளிலும் மேன்மைபெற்றிருந்தவர்களே. கீர்த்திபெற்ற சங்கராச்சாரியார் ஓம் நம்பூதிரி என்பது குறிப்பிடத்தக்கது. ஆனல் அப்பெரும் சமூகத்தில் இருந்துவந்த ஓர் மிகக் கொடூரமான ஆசாரத்தைப் பற்றி நினைக்கும்பொழுதே மனம் மிக வருத்தப்படுகிறது. அதைக் கண்டிக்கப் போதுமான சொற்கள் கிடைக்கவில்லை. நம்பூதிரிப் பெண்களிடையே கற்பைப்பற்றி சந்தேகிக்க நேர்ந்தால் அதை நன்ருக விசாரணைசெய்து தீர்மானிப்பதற்கு காலவிசாரம் அல்லது ஸ்மார்த்த விசாரம் என்று சொல்லுவார்கள். இக் கொடிய வழக்கத்தை லோகன் துரை (Mr. W. Logan)* மலையாள சரித்திரத்தில் விவரித்துள்ளார். ஓர் நம்பூதிரிமாதின் கற்பைப்பற்றி அவதூறு உண்டாகிறதாயிருந்தால் அப் பெண்ணை உடனே ஓர் தனியறையில் அடைத்துவிடுவார்கள். அவளுடைய ஒழுக்கத்

* Malabar Manual, P. 122.

தைக் குறித்து சரிவர விசாரித்து ஓர் முடிவுக்கு வருவதற்காக ஓர் நீதிச்சபை சீக்கிரம் அமைக்கப்படும். அக்குழுவில் மீமாஸ்கர்கள் அங்கத்தினர்களாகவும் ஓர் ஸ்மார்த்தர் தலைவராகவுமிருப்பர். சமீபத்திலுள்ள கோவிலொன்றில் விசாரணைநடைபெறும். முதலில் குற்றவாளியின் குற்ற சம்மதம் பெற முயலுவார்கள். அதற்காகச் செய்யும் தீமைகளுக்கு எல்லையில்லை. சந்தேகத்துக்கிரையான அந்தப் பெண்ணை வீட்டின் மேல் மாடியிலிருந்து கீழே தள்ளுதல், பாம்பை யடைத்திருக்கும் அறைக்குள் புகுத்துதல் முதலான இரக்கமற்ற செய்கைகளுக்கும் வைதீகர்கள் பின்னடையவில்லை எனத் தெரிகிறது. இவ்விதக் கொடுமைகளினால் ஒருவிதமான குற்றமுஞ் செய்யாதவர்களும் குற்றஞ் செய்ததாக ஒப்புக்கொள்ளுவார்கள். பெண், குற்றக்காரர்களாகக் குறிப்பிடும் புருஷர்களை அப்பொழுதே சமுதாயத்திலிருந்து விலக்கிவிடுவர். குற்றவாளிகளெனக் காணப்படும் புருஷர்கள் சுசீந்திரம் கோயிலுக்குச் சென்று கொதிக்கும் நெய்யில் கைநீட்டி சத்தியம்செய்து கை புண்படவில்லையானால் தமது குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். சந்தேகப்பட்ட பெண்ணைப்பற்றிய தீர்மானம் ஓர் இரவில் அயல்நாட்டுப் பிராமணன் ஒருவன் மூலம் அறிவிக்கப்படும். அதற்காக அப் பிராமணனுக்கு ஏராளமான பணம் கொடுப்பார்கள். பெண் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுகிறதாயிருந்தால் அப்போதே வீட்டிலிருந்து வெளியாக்கப்படுவாள். அந்த ஏழைப் பெண்ணின் எதிர்கால வாழ்க்கையைப்பற்றி வாசகர்களே அனுமானித்துக்கொள்ளுங்கள்.

"நாயர் வகுப்பைச் சேர்ந்த ஓர் பெண்ணை கீழ்ஜாதியானொருவன் தொடுகிறதாயிருந்தால் அப் பெண்ணையும் அந்தத் தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்த புருஷனையும் உடனே கொன்றுவிடுவார்கள்" என்று ஓர் மேல்நாட்டு ஆசிரியர் † கூறியிருக்கிறார்.

சில சமயம் ஓர் உயர் வகுப்புப் பெண்மீது கல்லெறிந்தோ வேறெந்தவிதமோ ஓர் புலையன் தீண்டுவானேயானால் அப் பெண் சமுதாயத்திலிருந்து அகற்றப்படுவதோடு மேற்கூறின புலையனுடன் வாழவேண்டும் என்பதும் கட்டாயமாக விருந்த

† Barbosa, P. 129.

தாம். இது கார்த்திகை மாதத்தில் வழங்கிவந்ததாக ‡ இரண்டு அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். இவ்வேளைகளில் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே போவதில்லை. பெண்ணுடன் ஒரு சிறுவன் இருப்பானாயினும் புலையர்களுக்கு அவர்களைத் தீண்ட உரிமையில்லையாம். கர்ப்பவதியான பெண்ணைத் தீண்டினால் அவளுக்குக் கருவுயிர்க்கும் வரையிலும் தனியாக விருத்தி, பெறும்குழந்தை ஆண்மகவாயின் அவளைச் சமுதாயத்தில் சேர்த்துக்கொள்வார்கள்; பெண்ணாயின் அம்மாது புலையனுடன் போகவேண்டியதுதான் ¶. A. D. 1696 வரையிலும் இந்த வழக்கம் தென் திருவாங்கூரில் இருந்துவந்ததாகத் தெரிகிறது. வஞ்சிநாட்டு மன்னரான வீரகேரளவர்மா கொல்லம் வருஷம் 871 தை-மாதம் 25-ஆ இதை ஓர் விளம்பர (Royal Proclamation)த்தால் அடியோடு ஒழித்துவிட்டார். அந்த அரியகல்பனை திருவாங்கோட்டு காணப்படும் ஓர் சிலையில் பொறிக்கப்பட்டிருக்கிறது §. வேறு எவ்விதமான உபாயங்களாலும் தீர்த்துக்கொள்ள முடியாததும் நெடுநாள் நிலைபெற்றிருந்ததும் தீண்டப்பட்ட உயர் வகுப்பு மாது தாழ்ந்த வகுப்பானுடன் போய்த்திரவேண்டும் என்பதுமாகிய மகா கொடிய வழக்கத்தை வேரோடு ஒழித்த அந்த ராஜகீய கற்பனை மிகவும் புகழத்தக்க ஒன்றேயாகும்.

---

‡ Dr. H. Gundert & Mr. T. Sakharia.

¶ Vide "Travancore" by Mrs. E. G. Hatch, P. 221.

§ Travancore Archaeological Series Vol VII P. 26. vide History of Kerala Vol II.

# சதி மீட்சி.

('கலா நேசன்' தத்தமங்கலம்.)

அக்காலத்தில் தான் 'ஆறிலொரு கடமை' 'மாதம் மும்மாரி' என்று கூறுகிறார்களே பெரியவர்கள்; அவை நடை முறையில் நடத்தப்பட்ட காலம். அது சமயந்தான், தானபுரியை ராஜசிம்மன் ஆண்டு வந்தான். அவ்வேந்தன் பெயர் பரதகண்டத்திலும், சீனம், சாவகம் முதலிய தொலைவிலுள்ள நாடுகளிலும் பிரசித்தம் அவன் கொடை வீரம் முதலியவை குறித்து. அவன் காலத்தில், இன்று காண்கிறோமே வறுமை, முதலிய கோர சிருஷ்டிகள், அவை அவ்வளவாக அதிகம் இல்லை. எங்கும் செல்வம் பொழிந்தது. எங்கும், மனக்களிப்பு. ஆனால், அக்காலத்தில் ஒரு துர்வழக்கம் மட்டும் நடந்துவந்தது. அதுதான் சதி. கணவன் மாண்டவுடன் அவன் மனைவி உடன் கட்டையேற வேண்டியது. ஆம்! அந்தச் சதியினால் தான், தானபுரியின் கீர்த்தியும், பெயரும், அதனை அடுத்து என்றும் வற்றாது ஓடும் ஜீவநதியாகிய மகாநதியின் ஞாபகமும் மறையவில்லை.

ராஜசிம்மன் மனைவி பத்மாக்ஷி ஏழைக்குடியில் பிறந்தவளென்றும், வேட்டைக்குச் சென்ற அரசன் ஒரு நாள் அவளைக் கண்ணுற்று, அவள் சௌந்தர்யத்தில் மயங்கி ராணியாக்கிக் கொண்டானென்றும் கேள்வி.

பத்மாக்ஷியை ராணியாக்கியதால், அரசியலில் நெருக்கடி ஏற்பட்டது. பிரஜைகளில் உயர் ஜாதியினர், அரசன் கீழ்ஜாதிப் பெண்ணை மணந்தது குறித்துக் கிளர்ச்சி செய்தனர். அரசன் இவற்றைப் பொருட்படுத்தவில்லை. பத்மாக்ஷியின் அழகில் மூழ்கிய அவனுக்கு அவை லக்ஷியமாகத் தோன்றவில்லை. அரசியின் மேல் அரசன் அன்பு பூண்டிருந்தானே யொழிய அரசி அவன்மீது காதல் கொள்ளவில்லை. ராஜசிம்மன் போர்ச்செயலில் ஈடுபட்டிருந்ததால் அவன் தன் மூப்பை உணரவில்லை. அவன் கிழத்தன்மையை உணர்த்தும் நரை மயிரைக்கூட கவனித்தானில்லை. இத்தகைய மூப்படைந்த ஓர் கிழவனை ஓர் யௌவன யுவதி எங்ஙனம் காதலிக்க முடியும்? அரசனாயிருந்தால்தா னென்ன?

தானபுரியின் மந்திரி புத்திரன் ரகுவீரன். கட்டுமஸ்தான உடல், பொதுநிறம், நல்ல உயரம். அவன் அழகைப்பற்றிப் புகழ்தல் முடியாது. அத்தகையவனை ஏன் பத்மாக்ஷி விரும்பியிருக்கமாட்டாள்? காலப்போக்கில் அவர்கள் இருவருக்கும் நட்பு ஏற்பட்டது. இவையனைத்தையும் அரசன் அறிந்தானில்லை. ஆனல், வெளிக்கு அரசன்மீது அன்பாகத்தான் நடித்துக் காட்டினுள் பத்மா.

குடிகளின் கிளர்ச்சி வலுத்துக்கொண்டே வந்தது. ராஜசிம்மனைச் சிங்காதனத்தினின்றும் இறக்கி அவன் தம்பியை அரசனுக்க முயற்சிகள் தொடங்கின. அதற்குக் காரணபூதன் ராஜசிம்மனின் தம்பியென்று கூறப்படுகிறது. பெரும் பெரும் யுத்தங்களில் ஜயித்த வீரனல், இக்கிளர்ச்சியை அடக்கமுடியவில்லை. ஒற்றுமை இன்றி எப்படி கூடும்? அம்முயற்சியின் பலனுக முடிவில் ஒருநாள் இரவில் கொலை செய்யப்பட்டான். மறுநாள் முறைப்படி தகனஞ்செய்ய ஏற்பாடுகள் நடந்தன. அரசனின் சிதைக்கு அருகில் அரசி கட்டை யேறுவதற்காக தனியாய் வேறு அடுக்கப்பட்டது. அரசியும், துக்க வடிவினளாய், பயந் தோன்றிய முகத்துடன் பல்லக்கினின்றும் இறங்கினுள். தீயும் மூட்டப்பட்டது. அவள் மூழ்கவேண்டியது தான் பாக்கி. அச்சமயத்தில் குதிரைகளின் காலடிச்சப்தம் கேட்டது. அது வரவரப் பெரிதாகி சிதையின் அருகில் நெருங்கிவிட்டது. அக்குதிரை மீதிருந்த உருவம், ராணி பத்மாவை அலாக்காகத் தூக்கித் தன் அருகில் வைத்துக்கொண்டு குதிரையைச் செலுத்தியது. இவையெல்லாம் விநாடியில் நடந்தவை. அங்கிருந்த அனைவரும் திடுக்கிட்டனர். காவலர் குதிரை மீதேறித் துரத்தினர். ஆனல் அவ்வுருவமும் குதிரையும் கடும் வேகத்திற் பறந்தன. காவலரும், அப்படி இப்படியென்று நெருங்கி விட்டனர். கொஞ்சம் வேகமாய்ப் பிடித்துவிடலாம். ஆனல், கம்பீரமாய் ஓடிக்கொண்டிருக்கும் மகா நதியில் அவ்வுருவம், குதிரை, அரசி மூவரும் மூழ்கக்கண்டனர். உடனே இறங்கிக் கவனித்தனர். அந்த மகாநதியின் வெள்ளத்தில் அவர்கள் தென்படவே இல்லை. செயலற்றுச் சிறிது நேரம் நின்று பெருமூச்சுடன் திரும்பி விட்டனர். அந்த மகாநதி "மக்கள் மாய்வர் பிறப்பர்,

ஆயினும் நான் மட்டும் போய்க்கொண்டே யிருப்பேன்” என்ற டென்னிஸனின் கவிதையை ஞாபகமூட்டியது. இந்நிகழ்ச்சிகள் நடந்தபின் ரகுவீரன் காணப்படவில்லையாம்.

காதல் வாழ்க!

---

# விவாகமில்லாத விதவை

(ஹிந்திக் கதை)

புரட்டாசிமாதம்: நவராத்திரி உற்சவத்தில் இரண்டாம் நாள். அப்துல்லா புரத்திலுள்ள பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் வேதபாராயணம் நடந்துகொண்டிருக்கின்றது. ஒவ்வொரு வீட்டிலும் காளிதேவியின் பஜனை நடந்துகொண்டு வருகின்றது. எங்கு பார்த்தாலும் துர்க்கையின் நாமம் காதுகளில் இன்னிசையுடன் ஒலித்தவண்ண மிருந்தது. சில வீடுகளில் சத்திய நாராயணருடைய கதை உபன்யாசம் நடக்கின்றது. மற்றும் சில வீடுகளில் ராமாயணமோ அல்லது துர்க்கையின் சரித்திரமோ பாராயணம் செய்யப்படுகின்றது. பாலர், விருத்தர், வயோதிகர் ஸ்திரீகள் யாவருமே சுத்தமே உருவாய் விளங்குகிறார்கள். தமக்கு இதத்தைத்தரும் தேவியினிடம் பிரார்த்தனையி லீடுபட்டிருக்கின்றனர்.

லாலா பவானி சங்கருடைய வீடு குதூகலத்தில் மூழ்கி யிருக்கின்றது. இவர்களுக்கு தேவியின் பூரண அனுக்கிரகம் கிடைத்துவிட்டது போலும்! அவருடைய ஒரே பிள்ளை கிரிஜா சங்கர் மணக்கோலத்துடன் இன்று வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கிறான். வீடு முழுதும் மெழுகிக் கோலமிட்டு வெகு சுத்தமாயிருக்கின்றது. பெண்களின் இனிய குரலோசையுடன் கலந்த காற்றும் அவர்கள் ஏதேனுமோர் காரியத்தை முன்னிட்டு இங்குமங்கும் செல்லும்பொழுது காலணிகளின் ஒலியும் வீட்டின் சோபையை அதிகரிக்கச் செய்தன. சில ஸ்திரீகள் மெழுகிக் கோலமிட்டுச் செம்மண் இட்டுக்கொண்டிருக்கிறார்கள். சிலர் தென்னையோலைகளினால் தோரணங்கள் கட்டிக்கொண்டிருக்கின்றனர். பாவம்! பேதை நளினி தனது திறந்த டிரங்குப் பெட்டியின்

முன்பு உட்கார்ந்துகொண்டு தனது புடவைகளையும் ரவிக்கைகளையும் ஒன்றென்றாய் எடுத்துப் பார்த்துத் தன் சகோதரனுடைய கிரஹப்பிரவேச காலத்தில் எந்த ஆடையை அணிந்துகொண்டால் நன்றாயிருக்குமென்ற ஆலோசனையில் மூழ்கியிருந்தாள். கடைசியாக கனகாம்பரவர்ண பனாரிஸ் பட்டுச் சேலையையும் மல்லிகையரும்புச் சுருக்கம்வைத்த ஜம்பரையும் தேர்ந்தெடுத்தாள். அவற்றை யணிந்துகொண்டு ஓர் பெரிய நிலைக்கண்ணாடி முன் தன்னழகைத் தானே கண்குளிரக் கண்டு களிப்பெய்தினாள்.

11-30 மணி வண்டி ஸ்டேஷனைச் சமீபித்துவிட்டதென அதன் சப்தத்தின் மூலம் பவானி சங்கர் வீட்டிலுள்ள ஸ்திரீகள் அறிந்துகொண்டனர். அப்பொழுது அவர்கள் அடைந்த ஆனந்தத்திற் களவேயில்லை. சிறிது நேரத்தில் ஒரு வேலையாள்வந்து "அம்மா! பெண்ணும் மாப்பிளையும் வந்துகொண்டிருக்கிறார்கள்" என்று சந்தோஷத்துடன் அறிவித்தான். நளினியின் தாய் சந்தோஷச்செய்தி கொண்டுவந்தவனுக்கு உணவுப் பதார்த்தங்கள் வழங்கினாள். நளினியும் இச் சுப சமாசாரத்தைத் தெரிவித்த அச்சேவகனுக்குத் தன் மோதிர மொன்றைப் பரிசாக அளித்தாள். ஸ்டேஷன் சமீபத்திலேயே இருந்தபடியால் மணமக்கள் வெகு சீக்கிரம் வந்துவிடுவார்களென்று க்ருஹப் பிரவேசத்திற்கான ஏற்பாடுகளைத் துரிதமாக செய்துமுடித்தனர். சிலநிமிஷங்களில் வாத்ய கோஷங்கள் காதில் விழுந்தன. ஸ்திரீகள் அனைவரும் தலைவாயிலையடைந்தனர். இளந் தம்பதிகளை யேற்றிக்கொண்டு காரும் வீட்டையடைந்தது. அப்பொழுது நளினியடைந்த சந்தோஷம் கரை கடந்தது. ஆலத்தி எடுப்பதற்காக எல்லோரையும் விலக்கிக்கொண்டு வாயிற்பக்கம் விரைந்து வந்தாள்.

"நளினீ! நீ உள்ளேபோ. 'சமேலி' ஆலத்தி எடுப்பாள்" என்று கூறிக்கொண்டே அவளுடைய தாய் அவளைக் கையைப்பிடித்து உள்ளே இழுத்துவிட்டாள். நளினிக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஸ்தம்பித்துப்போய், "சகோதரி உயிருடனிருக்கையில் வேறொரு மூன்றாவது மனுஷியை ஆலத்தி எடுக்கச்சொல்வதை நான் கண்டதில்லையே. இது மிக ஆச்சரியமாயிருக்கின்றதே" என்று கூறினாள். "இதை விளக்கிச் சொல்லவேண்டிய அவஸ்யம் இல்லை. நீ

உள்ளே போய்விடு. இது அப்படிப்பட்ட சமயம்" என்று தாய் துக்கம் கலந்த குரலில் கூறினாள். நடுக்கம் கலந்த குரலில், "இல்லையம்மா ஒரு காரணமுமின்றி என் உரிமையை நழுவ விட்டு விட்டு நான் உள்ளே எவ்வாறு செல்வேன்?" என்று கேட்டாள் நளினி.

"ஆம். காரணம் இதுவே. இத்தகைய சுபகாரியங்களில் விதவை எதிர்ப்படுவது அப சகுனம்" என்று கண்களில் நீர் ததும்பக் கூறினாள் தாய்.

நளினி இடியோசைகேட்ட நாகம்போல் நடு நடுங்கினாள். உயிர் அவளை விட்டுப் பிரிந்ததுபோல் அவளுக்குத் தோன்றியது. "விதவை" என்ற சப்தம் அவளுடைய காதுகளைத் துளைத்தது. இதுவரை இவ் வார்த்தையைக் கேட்டறியாள். விவாகமாகாதவள் கூட விதவையாகின்றாளென்ற விந்தையை அவள் அதுவரை கேட்டதேயில்லை. மேற்கொண்டு கேள்விகள் கேட்க அவள் மனம் சக்தியிழந்தது. அண்ணன் சௌக்யமா யிருக்க வேண்டுமென்ற ஒரே எண்ணத்தில் எதையும் அவள் அனுபவிக்கச் சித்தமா யிருந்தாள். உடனே அவ்விடத்தை விட்டகன்று தன்னறைக்குச் சென்று தாளிட்டுக்கொண்டு கட்டிலிற்சாய்ந்தாள். மற்ற ஸ்திரீகள் க்ருஹப்பிரவேச கார்யங்களை முடித்துக்கொண்டு மங்களம் பாடிக் கொண்டு உள்ளே தம்பதிகளை யழைத்துவந்தனர். சகலரும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கித் திளைக்கின்றனர். அந்தோ! பாவம். நளினி மட்டிலும் துக்கக் கடலில் தத்தளித்துக்கொண்டிருக்கிறாள்! அவளுக்குத் தான் காண்பதும் கேட்பதும் கனவோ நினைவோ என்று சந்தேகம். உண்மைதானாவென்று தெரிந்துகொள்வதற்காகக் கண்களைக் கசக்கிக்கொண்டு நன்றாய் விழித்துப் பார்த்து "ஆம். நான் காண்பது கனவல்ல உண்மையே. எனக்குத் தெரியாமல் என் விவாகம் எப்பொழுது நடந்தது? நான் எவ்விதம் விதவையானேன்?" என்று தன்னையே வினவுவாள். ஒரு சமயம் தன் அன்னையிடம் சென்று தன் சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணங் கொண்டவளாய்க் கதவண்டை செல்வாள். "சுபகாரியம், விதவை, அபசகுனம்" என்ற

வார்த்தைகள் அவளுடைய காதுகளில் ஒலிப்பதுபோல் தோன்றும். திரும்பச்சென்று கட்டிலிற் சாய்வாள்.

கிரிஜா சங்கர் நளினியை மிகவும் நேசித்து வந்தான். வீட்டிற்குள் நுழைந்ததும் சுற்றுமுற்றும் பார்த்தான். தன் அன்புள்ள தங்கையைக் காணேம். அமைதியை இழந்தான். நளினி எங்கே என்று தன் அன்னையைக் கேட்டான். அன்னை அவசர வேலைகளி லீடுபட்டிருந்தாளெனினும் கிரிஜா சங்கருடைய வார்த்தைகளைக் கேட்டும் கேட்காததுபோ லிருந்துவிட்டாள். கடைசியில் தானே நேரில் நளினியி னறையை யடைந்தான். விம்மி விம்மி அழுது புலம்பிக் கண்ணீரை யாறய்ப் பெருக்கிக்கொண்டிருக்கும் நளினியைக் கண்டான். "இன்று சந்தோஷ தினமா? அல்லது துக்க தினமா என்னவிஷயம்?" என்றான். அண்ணனின் அன்பொழுகும் வார்த்தைகள் அவளுடைய துக்கத்தை அதிகரிக்கச்செய்தன. "அண்ணா! என்னறையைவிட்டுச் சென்றுவிடுங்கள். என் முகத்தில் விழிப்பது பாவம். நான் ஒரு விதவை" என்றாள்.

தங்கையின் துன்பம் நிறைந்த சொற்கள் கிரிஜாசங்கருடைய இதயத்தை ஊடுருவிப் பாய்ந்தன. சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்துப்போய்விட்டான். "நளினீ! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன? அல்லது ஏதாவது சொற்பனம் கண்டாயோ? உனக்கு வயது 11 தானாகிறது. உன்னைவிட நான் 5 வயது பெரியவன். என்னை யறியாமலா உன்னுடைய விவாகம் நடந்துவிட்டது? உனக்கு விவாகமே ஆகாமலிருக்கையில் நீ யெப்படி விதவையாகமுடியும்?" என்றான்.

"நான் கனவுகாணவில்லை. என் சுயப் பிரக்ஞையுடன்தான் சொல்லுகிறேன். அம்மாவிடம் கேளுங்கள்"

கிரிஜாசங்கர் அன்னையைக்காணச் சமையலறைக்குச் சென்றான். அதே சமயத்தில் பவானிசங்கரும் சாப்பிடுவதற்காக அங்கேவந்து சேர்ந்தார். தாய் தந்தையர் இருவரையும் பார்த்து "இதென்ன காரணம் விதவை விதவையென்று நளினி பிதற்றுகின்றாளே? இவளுக்கு விவாகம் எப்பொழுதாயிற்று? இவள் எப்பொழுது விதவையானாள்?" என்று வினவினான். அன்னையின்

கண்கள் நீர்ரைப்பெருக்கின. அழுகை யொலியில் "அப்பா அந்த வயிற்றெரிச்சலே ஏன் கிளப்புகின்ருய்? அவள் என் கர்ப்பத்திலிருந்த காலத்தில் என் தோழியொருத்தியும் கர்ப்பமாயிருந்தாள். இவளுக்கும் என் தோழியினுடைய கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கும் விவாகம் செய்வதென்று நிச்சயம் செய்யப்பட்டது. அவளுக்கு ஒரு ஆண்குழந்தையே ஜனித்துவிட்டது. துரதிருஷ்ட வசமாய் 15 நாட்களுக்கெல்லாம் மரித்துவிட்டது. நம்மேல் இந்தப் பேரிடி விழுந்துவிட்டது. கடவுள் சித்தம் இப்படி யிருக்கின்றது" என்று கூறி முடித்தாள். லாலா பவானிசங்கர் தலையைக் கவிழ்ந்து கொண்டார். நெடுமூச்செறிந்துகொண்டே, "கடவுள் சித்தப்படியே எல்லாம் நடக்கும். நடந்தது நடந்து போய்விட்டது, மீண்டும் மீண்டும் இந்தப் பேச்சைக் கிளப்பி என்னை யேன் வேதனைக்குள்ளாக்குகின்ருய்!" என்ருர்.

பூவுலகைச் சூழ்ந்துள்ள வாயுமண்டலம் ஜீவப் பிராணிகளிடையே அவசியம் தன் பிரபாவத்தைச் செலுத்தியே வருகின்றது. எனினும் பருவகாலத்தில் வாயுமண்டலத்திலேற்படும் அலைகள் மிகச் சக்தி வாய்ந்தவை. சென்ற ஆண்டுதான் கிரிஜாசங்கர் அவ்வூர் உயர்தரப் பாடசாலையில் 10-வது வகுப்பில் தேறி யிருந்தான். தர்க்கம், வாதம், முதலிய கலாசாலைக் காற்று அவனுடைய உணர்ச்சிகளுக்கு உதவியளித்து வந்தது. எவ்விஷயத்தையும் யார் சொன்னபோதிலும் காரணமின்றி ஒப்புக் கொள்ளமாட்டான். தந்தையுடன் சொற்போர் தொடுக்க ஆயத்தமானன்.

"தந்தையே மன்னிக்கவேண்டும். கர்ப்பத்திலிருக்கும் சிசுக்களுக்கு விவாகம் செய்விப்பது எந்த தர்ம சாஸ்திரத்தில் எழுதியிருக்கின்றது! தாங்கள் தெருவில் போகும்ஒருவன் சொல்லும் அர்த்தமற்ற வார்த்தைகளை அங்கீகரிக்கின்றீர்கள்; ஆனல் ஒரு பாபமறியாத நளினியை உங்கள் கொடுமைகளுக்கு இலக்காக்கின்ற உமது பாபங்கள் மன்னிக்கத் தக்கவைய்யல்ல. தங்களுடைய செயல் எவ்வளவு தூரம் நியாய சம்மதம் என்று சிறிது சூக்ஷ்ம புத்தியுடன் விசாரணை செய்துபாருங்கள். நீங்கள் சொல்வது சரியென்றே வைத்துக் கொண்டாலும், அவள் விதவையாய் விட்டால் அவள் இதிற்செய்த பாபம் என்ன? அவளுடைய முகத்தைக்

காண்பது அபசகுனமா? தங்களைப்போன்ற ஈரமிலா நெஞ்சத்தார்களும் புத்திஹீனர்களும் சேர்ந்தே பாரத தேசத்தில் தாசிகள் உற்பத்திக்கு வழிகாட்டியிருக்கின்றார்கள். இம்மாதிரியான குரூரச் செயல்களே விலைமாதர்களை ஸ்ருஷ்டிப்பதற்கு மூலகாரணம். தந்தையே தங்கள் செய்கை மிகக் கொடூரமானதல்லவா?''

கிரிஜா சங்கரின் வயது சொற்பமே; எனினும் அவனுடைய வார்த்தைகள் நியாயமாயும் உசிதமாயுமிருந்தன. கிரிஜா சங்கருடை மேற்கண்ட வார்த்தைகளைக் கேட்ட தாயும் தந்தையும் பேச நாவெழாமல் திகைத்துப் போயினர். இருவருடைய மனமும் மகனின் ஒவ்வொரு வார்த்தையும் வாஸ்தவமே யென்று ஒப்புக் கொள்ளவே விரும்பின; பவானி சங்கருடைய குரு ராமதாஸர் பகீரதப் பிரயத்தனம் செய்து மூடக்கொள்கைகளனைத்தையும் கல்மேலெழுத்துப் போற் பதிய வைத்திருந்தார். அதை யார்ரே அழிக்க முடியும்? வெகுகாலமாக அழுக்கேறி வரும் வஸ்திரத்தை ஒருமுறை சவுக்காரத்தாற் கழுவினால் எப்படி வெண்மை தரும்? ஆனால் சேர்ந்திருந்த அழுக்கைச் சிறிது பிரித்துவிட உதவியாயிருந்தது. தாய்தந்தையர்கள் பிரதியுத்தரம் கொடுக்க வியலாமற் போகவே, மாலையில் குலகுரு ராமதாஸரை வீட்டிற் கழைத்து சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்வதென முடிவுகட்டப் பட்டது. கிரிஜா சங்கரும் சரியெனச் சம்மதித்துத் தன் நண்பர்களுடன் உல்லாசமாய்க் காலங்கழிக்கச் சென்று விட்டான்.

மாலை விளக்கேற்று முன் கிரிஜா சங்கர் வீட்டையடைந்தான். விசாரித்ததில் நளினி பகலில் உணவேதும் அருந்தவில்லையென்று தெரிந்தது. உடனே நளினியினறைக்குச் சென்று தலையைக் கோதிக்கொண்டே, "தங்காய்! நீ ரொம்பப் பச்சைக் குழந்தையாயிருக்கின்றாயே! போய்ச் சாப்பிடு. வீணாக உனக்கேற்பட்டிருக்கும் இத்துக்கத்தைத் தவிர்க்க நானே போராட முன்வந்திருக்கிறேன். தாய் தந்தையர்களென்ன, அவர்களுடைய மனம் கல்லா? அவர்களும் உன் நன்மையை விரும்புகின்றவர்களே. உன் சத்துருக்களல்ல. அவர்களென்ன செய்வார்கள்? எல்லாம் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள போலி வைதிகர்களுடைய சிக்ஷையின் விபரீத விளைவேயாகும் ...ங்காலம் தர்மசாஸ்திரங்களைக்

கரைத்துக் குடித்து விட்டதாய்ப் பெருமை பாராட்டும் புரோகிதர் வரும்பொழுது இவ்வனீதங்களின் சாயம் வெளுத்துப் போகும். நான் எவ்வளவு சாதுர்யமாக இம்மூடக் கொள்கைகளைத் தகர்த்தெறிகின்றேனென்பதை நீ காண்பாய். நானிருக்கையில் ஒன்றுக்கும் நீ கவலைப்படாதே போய்ச் சாப்பிடு" என்று அன்பொழுகக் கூறினன். நளினியின் முகத்தில் சந்தோஷக் குறிகள் தென்பட்டன. "நல்லது. இதோ பிரார்த்தனையை முடித்துக் கொண்டு உணவருந்தச் செல்கின்றேன். எனக்கு ஒன்றிலும் மனம் செல்லவில்லை. அதனல்தான் நான் மாலைப் பிரார்த்தனை கூடச் செய்யவில்லை" என்ருள். உடனே நளினி கைகால் முகங்களைச் சுத்தம் செய்து கொண்டு பிரார்த்தனையி லீடுபட்டாள். மனவமைதி பெற வேண்டி இனிமையான ராகத்தில் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தாள்.

குரு ராமதாசருக்கு அழைப்பனுப்பப்பட்டது. "பவானி சங்கர் அழைத்திருக்கின்ருர்; கொஞ்சம் இன்று நல்ல வேட்டைகிடைக்கும். சந்திரன் இடம் மாறுகின்ருன். சாயுங்காலம் ஜபம்ஏதாவது அவருக்குச் செய்யவேண்டி யிருக்கும்" என்று தனக்குள் அனுமானித்தவராய் உடனே பவானி சங்கருடைய வீட்டை யடைந்தார். வீட்டில் நுழையும் பொழுதே உள்ளிருந்து ஸ்வரத்துடன் மந்திரங்கள் உச்சரிக்கும் சப்தம் குருவின் காதில் விழவே அவருக்குப் பாதி உயிர் போய்விட்டது. "இதேதடா! நமக்குக் கிடைப்பதில் பங்குபோட்டுக்கொள்ள வேருெருவன் வந்து சேர்ந்து விட்டான் போலிருக்கின்றதே" யென்று பீதியடைந்தார். உள்ளே சென்றதும் அன்னியர் யாருமங்கில்லை. நளினிதான் ஸ்வரத்துடன் பிரார்த்தனை நடத்திக்கொண்டிருக்கின்ருள். வந்த குருவுக்கு ஆசனமளித்து அமரும்படி கிரிஜாசங்கர் உபசரித்தான். "இங்கு உட்கார என்ன யோக்யதை? மஹா பாவம். எல்லாம் கலியின் விசேஷந்தான். என்ன செய்வது? சூத்திரர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் வேதமந்திரங்களை யுச்சரிக்க அதிகாரமேது? ராமா! ராமா!" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டே மொழிந்தார். கிரிஜாசங்கர் ஏற்கனவே மனந்துடித்துக் கொண்டிருந்தான். குருவின் மேற்படி மொழிகளைக் கேட்டதும், "போதும் சாஸ்திரி

யாரே! என்னை மன்னியுங்கள். உங்களுடைய இத்தகைய அநீத மொழிகளே மங்களகரமான இச்சுபதினத்தைத் துக்கமயமாக்கி விட்டிருக்கின்றன. உங்களைப்போன்றவர்கள் சுயநலத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக ஒன்றுமறியாத கபடமற்ற பக்தர்களுக்கு வெகு விசித்திரமான புத்தி கற்பித்து வருகின்றீர்கள். இதைப் பற்றிப் பேசவே இன்று உங்களை அழைத்திருக்கிறோம்," என்று கூறிமுடித்தான். இதற்குள் பவானி சங்கர் தன்னுடன் ஒரு வயோதிக நண்பரை யழைத்துக்கொண்டு அங்குவந்து சேர்ந்தார். அவர் பெயர் பண்டித மங்களதேவர். லாலா பவானி சங்கருடைய பால்ய நண்பர். இவருடைய க்ஷேமத்தில் கருத்துள்ளவர். ஸஹாரபுரத்திலுள்ள ஆரிய சமாஜத்தின் உபதேசிகர். இந்த ஜில்லாவில் பிரசாரம் நடத்திவந்தார். அதுசமயம் அப்துல்லா புரத்திலும் பக்கத்திலுள்ள நாலு கிராமங்களிலும் பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் அங்கு அன்றுதான் வந்திருந்தார். பவானி சங்கரைப் பார்த்து அதிக நாளாகிவிட்டபடியால் தற்செயலாக இச்சமயத்தில் அவரைப் பார்க்க வந்திருந்தார். நால்வரும் ஓரறையிலமர்ந்தனர். நளினியும் அவள் மாதாவும் அவ்வறையின் கதவின் பின்புறமறைவில் சம்பாஷணையைக் கவனிப்பதற்காக வீற்றிருந்தனர். வருத்தத்துடனிருந்த கிரிஜா சங்கர் பெரியோர்கள் முன்னிலையிலிருப்பதால் ஆரம்பத்தில் சங்கோஜத்துடன் தன் சந்தேகங்களை வெளியிட்டான். இதை மங்களதேவர் அறிந்துகொண்டார். அவர் பேச்சுவன்மை படைத்தவர். அவருக்கோ இரவும் பகலும் தர்க்கம் செய்வதே வேலை. கேட்பானேன்! விஷயத்தைப் பொது நோக்குடன் விவாதிக்கப்புகுந்தார். சமூகம் சாஸ்திரத்தின் பெயரால் விதவைகளுக்குச் செய்துவரும் அநீதங்களை ஒவ்வொன்றாய் ஆதாரத்துடன் விளக்கிவைத்தார். இருதரப்பிலும் கேள்விகளும், பதில்களும், ஆதாரங்களும் பிரமாணங்களும் எடுத்துக் காட்டப்பட்டன. இவர்கள் உட்கார்ந்திருந்த அறை தெருவின் பக்கமிருந்தபடியால் மேலும் அநேகர் ஆங்கு கூடிவிட்டனர். 2 மணிநேரம் ராமதாசரும் தர்க்கம்செய்துபார்த்தார். கடைசியில் தோல்வியடைந்தார். முகம்வெளுத்து பதட்டத்துடன் பலவாறு பிதற்றிக் கொண்டே அவ்விடம் விட்டகன்றார். கூட்டமும் கலைந்தது. கடைசியாக மங்களதேவர் விஷயமென்ன

வென்று விசாரிக்கவே அவ்வீட்டிலேயே நளினிக்குச் செய்துவரும் அநீதம் தெரியவந்தது. இனிமையாகவும் அன்பாகவும் பவானி சங்கருக்கு விஷயங்களை எடுத்துணர்த்தினர். இதற்குள் நளினியும் அவளன்னையும் கதவைத் திறந்து கொண்டு உள்ளேவந்து சேர்ந்தனர். எல்லோரையும் வைத்துக் கொண்டு சாஸ்திரத்தின் கருத்துக்களை விளக்கிக் கூறினர். எல்லாவற்றையும் கேட்டு நளினியின் பெற்றோர் தம் குற்றத்தையுணர்ந்தனர். நளினிக்கு மறு விவாகம் செய்விப்பதில்லை யென்று தீர்மானித்திருந்த அவர்களுடைய அபிப்பிராயம் மாறிவிட்டது. நளினியின் விவாகத்தைப் பற்றி சாஸ்திரிகளுடன் ஆலோசித்தனர்.

சாஸ்திரிகளும் வரனுக்காக வெளியில் முயற்சி செய்தார். ஆரியவகுப்பில் அவர் ஓர் உத்தமமான வரனைக் குறிப்பிட்டார். நாலைந்து வருஷங்களுக்குப் பின் நளினியின் விவாகம் வெகு சிறப்பாய் நடந்தேறியது. சாஸ்திரிகள் ஒரு வாரகாலம் அப்துல்லா புரத்தில் தங்கியிருந்து மிகுந்த உற்சாகத்துடன் தம் பிரசாரத்தை நடத்திவந்தார்.

---

## வஞ்சக உலகம்

(S. சத்தியமூர்த்தி)

"அப்படியானல் என்ன, ரமா! உன் விவாகத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டது வாஸ்தவம் தானா?" என்று மேஜையின் மீதிருந்த "மாதர் மறுமண"த்தைக் கையிலெடுத்துக் கொண்டே மோகன் கேட்டான்.

ஆம் முற்றிலும் வாஸ்தவமே! யென்று பெருமூச்செறிந்து கொண்டே ரமா கூறினள்.

மோஹன்:—யாருடன்?

ரமா:—இது எனக்குத் தெரியாதே.

மோஹன்:—தெரியாதா! இதென்ன விந்தையாயிருக்கின்றதே!

ரமா:—ஆம் தெரியவே தெரியாது. அவர் யாரென்று எனக்குத் தெரியாதவரையில் பிறரிடம் அவரைப்பற்றி என்ன பேசமுடி

யும்? ஆனுல் ஒன்றுமட்டும் நிச்சயம். அவர் ஒரு ஆண்மகன் தான்

மோஹன்:—உண்மையில் நீ மிகவும் களங்கமற்றவள். நல்லது, ரமா! ஆள் இன்னுரென்பதைக் கண்ணுலும் பாராமல் முன் பின்னறியாத ஒருவரை மணம் புரிந்து கொள்ள நீ எவ்வாறு சம்மதித்தாய்?

ரமா:—மோஹன்! உனக்குத் தெரியாதா? ஹிந்து ஸ்திரீகளுக்குத் தன் விவாக சம்பந்தமாகப் பேசத்தான் எவ்வித உரிமையும் கிடையாதே! ஸ்திரீகள் தம் விவாகத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட வெளியிட முடியாத நிலைமையில் அடக்கி யொடுக்கிவைக்கப் பட்டிருக்கின்றுர்களே? அதையும் மீறி யாராவது தப்பித்தவறி யொருவார்த்தை பேசிவிட்டால் பெருங் கொடுமைக்காளாக நேரிடுகின்றது. ஆகையால் பெண்கள் வாயைப் பொத்திக்கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்து விடுகின்றுர்கள். சொல்ல வேண்டியதோ செய்யவேண்டியதோ எல்லாம் தாய் தந்தையர்களே. அது தான் ஒழுங்கு. இதில் பெண்களுக்குப் பேச எவ்வித உரிமையும் கிடையாது.

மோஹன்:—"ரமா! நீ சொல்வதுண்மையே! ஆனுல் தற்கால நிலையில் பெண்கள் சும்மா இருப்பது பெரும் முட்டாள் தனமாகும். பெண்கள் தம் விவாக சம்பந்தமாகச் சில முக்கிய விவரங்களையாவது அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் தற்கால உலகம் கவனிப்பதெல்லாம் பணம் ஒன்றையே. பணத்தாற் செய்யமுடியாத காரிய மொன்றுமேயில்லை. எவ்வளவு பெற்ருேர்கள் பணப்பேய் பிடித்து எத்தனையோ பெண்களின் வாழ்வைப் பாழ்படுத்துகின்றுர்கள்! நீயே கண்கூடாகவும் பார்த்திருக்கின்ருய். உன்னுடைய வாழ்க்கையும் அவ்விதம் ஆய்விடக் கூடாதென்பதே என் கவலை.

ரமா:—நீ யென்ன இவ்விதம் கூறுகின்ருய்? என் தாய் தந்தையர்கள் அவ்வளவு அற்பர்களென்று வெண்ணுகின்ருய்?

மோஹன்:—என்னைக் கோபித்துக் கொள்ளாதே. எனக்கு அவ்வாறு தான் புலப்படுகின்றது.

ரமா:—ஒருக்காலும் இருக்காது நீ பென்னைப் பரிகசிக்கின்ருயென்று நினைக்கிறேன்.

மோஹன்:—உன்னிடம் கேலியாகப் பேசுவதற்கு இதுவா சந்தர்ப்பம்?

ரமா:—அப்படியானல் நீ சொல்வ துண்மையா?

மோஹன்:—சிறிதும் பொய்யல்ல, நான் கேள்விப்பட்டது மெய்யே.

ரமா:—ஆனல் எனக்கு நம்ப முடியவில்லை.

செல்லச் செல்லத் தானே தெரியும். நான் சென்றுவிட்டு நாளையதினம் வருகின்றேன் என்று கூறிவிட்டு மோஹன் அவ்விடம் விட்டகன்ருன்.

2

ரமா:— நீ மிகவும் கடின சித்தமுடையவன். இன்று முதல் நீ என்னிடம் விளையாடுவதை விட்டுவிடு. நீ வீணுக என் தாய் தந்தையரைக் குற்றம் சாட்டுகிருய். நீ நேற்றுச் சென்ற பின்பு எல்லாவற்றையும் நன்கு விசாரித் தறிந்துவிட்டேன். மணமகன் பொருத்தமாகவே தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றது. சற்றேறக்குறைய உன் வயதேயிருக்கும். பி. ஏ. பாஸ் செய்திருக்கிருர். இருநூறு ரூபாய் சம்பளத்திலிருக்கிருர். இதைவிடத் தாய் தந்தையர் வேறு என்ன செய்யமுடியும்?

மோஹன்:— ரமா! நீ ஏமாற்றமடையப் போகின்ருய். நான் மறுபடியும் சொல்லுகின்றேன். வேடிக்கையல்ல. நீயே நன்ருய் யோசித்துப்பார். உன்னுடன் விளையாடுவதற்கு இதுவா சமயம்? உண்மையான சகோதரனைப் போல் என்னை நீ மதிக்கவில்லையா? நல்லது, நான் இவ்விடம் விட்டு இப்பொழுதே சென்றுவிடுகின்றேன். ஒருக்கால் நான் இவ்விடம் வந்திருப்பது உனக்கு வருத்தத்தைக் கொடுப்பதாயிருக்கலாம். இன்று முதல் நான் உன்னுடன் இவ் விஷயத்தைப்பற்றிப் பேச்சே யெடுக்கவில்லை—இவ்வாறு கூறிவிட்டு மோஹன் தன் வீட்டிற்குத் திரும்பினன். மோஹன் மனம் நிம்மதியாயில்லை. ரமாவின் பொருட்டு ஏனே அவன் எல்லையற்ற வியாகூலமடைந்திருந்தான்.

மோஹன் ரமாவை ஓர் சகோதரியைப் போல் நேசித்துவந்தான். ரமாவும் அவ்விதமே. இவர்களிடையே இணையற்ற சகோதர வாஞ்சை குடிகொண்டிருந்தது. ஒரு நாளைக் கொருமுறையாவது ஒருவரை யொருவர் சந்திக்காவிட்டால் அவர்களுக்குத் தூக்கம் வராது. எனில் ரமாவின் நிமித்தம் மோகன் இவ்வளவு தூரம் கவலை யெடுத்துக்கொண்டதில் வியப்பொன்றுமில்லை.

3

"அப்பா! ரமாவின் விவாகம் ஏன் இவ்விதம் விபரீதமான முறையில் நடைபெறுகின்றது? ரமாவின் பிதாவுக்கு வேறு நல்ல மாப்பிள்ளை கிடைக்கவில்லையா? ஏன் இவ்வாறு ஓர் கிழவனுக்கு விவாகம் செய்விக்க ஏற்பாடு செய்திருக்கிறார்?"

"அவர்கள் எப்படிப் போனால் உனக்கென்ன? இது சம்பந்தமாக ரமாவின் தந்தையினிடம் நானும் எவ்வளவோ முறை சொல்லிப் பார்த்துவிட்டேன். ஆனால் அவர் தம் நோக்கத்தினின்றும் பின் வாங்குபவராய்க் காணோம். அவர் பணத்தைத் தான் பெரிதாக நினைக்கின்றாரே யொழியத் தன் மகளின் வாழ்க்கையைப் பெரிதென மதிக்கவில்லை. அவர் பணப் பேய் பிடித் தலைகின்றார். இதில் நாம் என்ன செய்யக்கூடும்? யார் என்ன சொன்னாலும் அவர் மசியமாட்டார்."

"அப்பா! தாங்கள் சொல்வதைப் பார்த்தால் இது மிகவும் அநியாயமாயிருக்கின்றதே! பாவம்! ரமாவின் வாழ்க்கை பாழாய்விடுமா இல்லையா? தாங்களே யோசித்துப்பாருங்கள்."

"ஆம். அதற்கு நாமென்ன செய்யலாம்? உலகம் பணத்தில் மிதந்து கொண்டிருக்கிறது. காலம் விபரீதமாய் மாறிவிட்டது கடவுள் சித்தப்படிதான் எல்லாம் நடக்கும்."

தந்தையிடம் மேலும் அதிகமாய் இவ்விஷயத்தைப்பற்றிப் பேச மோஹன் விரும்பவில்லை. எனவே பேச்சை வளர விடாமல் நிறுத்திக்கொண்டான். ஆனால் அவன் மனம் சும்மாவிருக்க இடங் கரவில்லை. ரமாவின் விவாக சம்பந்தமாக அண்டை அயலில் பிரஸ்தாபித்து வந்தான். இதன் மூலம் ரமாவின் தந்தையினிடம் மன மாற்றமேற்படுமென்று அவன் எதிர்பார்த்தது பகற் கனவாகவே முடிந்தது.

ரமா தன் தாய் தந்தையரை முற்றிலும் நம்பியிருந்தாள். அபலைகளுக்குத் தாய் தந்தையரைத் தவிர வேறு கதியேது? தான் முற்றிலும் நம்பியிருக்கும் தன் பெற்றோர்களே தனக்குத் துரோகம் செய்வார்களென்று அவள் எப்படி நினைக்கக் கூடும்? தன் விவாக சம்பந்தமாக மோஹன் கூறியது உண்மையாவென்றறியத் தன் பெற்றோர்களிடம் ரமா பிரஸ்தாபித்தாள். அவர்களோ, "கண்மணி! கண்டவர்கள் சொல்கின்றார்களென்று நீ நம்பாதே. உன் கணவன் நிரம்ப அழகானவன்; நல்ல யௌவனம்" என்று அன்பொழுகக் கூறினார்கள். ரமா அவர்கள் சொல்வதை எவ்வாறு நம்பாமலிருப்பாள்?

சில நாட்களில் ரமாவின் விவாகம் நடந்தேறியது. உத்ஸவம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நாட்டியக் கச்சேரிகளும் டீபார்ட்டிகளும், பாட்டுக் கச்சேரிகளும் நடைபெற்றன. மறுநாள் ரமாவும் கணவன் வீட்டிற்குப் புறப்பட்டாள். ரமாவின் நண்பனுக்கு உலகம் இருளில் மூழ்கியது போற் காணப்பட்டது. புறப்படுந் தருணத்தில், தனிமையில் சிந்தனையில் மூழ்கித் துன்பமே யுருவாய் வீற்றிருந்த மோஹனைப் பார்த்து, "மோஹன! அவசியம் வரவேண்டும். மறந்து விடாதே" என்று கூறிவிட்டு ரமா பிரிந்தாள்.

மோஹன் யாது பதில் கூறுவான்! ரமாவை ஓர் முறை பார்த்து விட்டு ஆகாயத்தின் திறந்த வெளியை நோக்கி ஆழ்ந்த மௌனத்தில் மூழ்கினான்.

பாரிஸ்டர் ராமநாதன் தன் பேச்சு வன்மையாலும், சாதுர்யத்தினாலும் சர்க்காரின் நன் மதிப்பைப் பெற்று பப்ளிக் பிராசிக்யூட்டர் பதவி வகித்து வந்தார். அவருடைய பெயரும் புகழும் ஜில்லா முழுதும் பரவியிருந்தது. நல்லவிவேகமுடையவர். ஆயினும் அவருடைய உயர்ந்த கருத்துக்களுக்கும் செய்கைகளுக்கும் யாதொரு சம்பந்தமுமிருக்காது. அவருக்கு வயது சுமார் 50 இருக்கலாம். அவருக்கு ஸோமன் என்றொரு புத்திரனுமிருந்தான். அப்பொழுதுதான் காலேஜில் பி. ஏ. பரீட்சை தேறிவிட்டு வீட்டிற்கு வந்திருந்தான். பாரிஸ்டர் ராமநாதன் தன் புதிய மனைவி ரமாவுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

ரமா, மாமனர் வீட்டிற்கு வந்து சில நாட்கள் ஆயிற்று; எனினும் தன் கணவன் யாரென்று அவளுக்குத் தெரியாது. ஸோமனையே தன் பதியென்று அவள் நினைத்துக்கொண் டிருந்தாள். தன் கணவன் ஓர் யௌவன புருஷனென்று தாய் தான் சொல்லியிருக்கின்றாளே! அவள் அம்மாதிரி யெண்ணியதில் என்ன தவறு? ஏதுமறியாச்சிறுமி! தான் யாரைக் கணவனென்று நினைத்திருக்கிறளோ அவனே தன் புத்திரனென்று எங்ஙன முணர்வாள்? சில வாரங்கள் வரை இந்த ஏமாற்றத்திலேயே காலங் கழித்து வந்தாள்.

## 5

ஒரு மாதம் கடந்தது. "அக்கா! நீங்களெல்லோரும் ஏனிவ்விதம் புலம்புகின்றீர்கள்? எனக்கொன்றும் விளங்கவில்லையே! என் வளையல்களையேன் உடைத்தெறிகின்ருய்? என்னை விட்டுவிடு. என் வளையல்களை யுடைக்காதே" என்று மனம் பதைக்க ரமா கூறினள்.

"இல்லை ரமா! நீ மஹா துரதிர்ஷ்டசாலி. உன் பதி யிறந்துவிட்டார். நீ விதவையாய்விட்டாய்."

"அக்கா! நான் உண்மையாய் விதவையாகிவிட்டேனு? பத்து தினங்களுக்குமுன் இறந்துபோனவர்தான என் கணவன்?"

"ஆமம்மா! அவரே உன் கணவர். பாவம்! இச் சிறுவயதில் இக் கொடுந் துன்பத்திற்கு ஆளானயே!"

"ஏ! கடவுளே! நான் காதால் கேட்பது உண்மைதானு? இப்படியும் என்னைச்சோதிக்கலாமா? இன்றுவரை உண்மையையறியாமலே யிருந்திருக்கின்றேனே!" என்று பலவாறு பிரலாபித்து மூர்ச்சையடைந்து கீழே விழுந்தாள். கை வளையல்கள் உடைத்தெறியப்பட்டன. சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் மூர்ச்சை தெளிந் தெழுந்தாள். எழுந்து உட்கார்ந்துகொண்டு சித்தஸ்வாதீனமற்றவள்போல் அழுது புலம்பிக்கொண்டிருந்தாள்.

"நான் ஏமாந்துவிட்டேன். மதிமோசம்போனேன். தாய் தந்தையரின் மொழிகளை உண்மையென நம்பினேன். சகோதரனைப்போலென்னை நேசித்துவந்த மோகனுடைய வார்த்தைகளை அலக்ஷியம் செய்தேன். அதற்குப் பலன் இப்

பொழுது கிடைத்துவிட்டது. தாய் தந்தையரின் நய வஞ்சக மொழிகளிற் சிக்குண்டு என் சுகவாழ்வைப் பறிகொடுத்தேன். இப்பொழுதுதான் அவ் விருவர்களுடைய வஞ்சகம் வெளியாயிற்று. ஏ! பணப்பேய்ப்பிடித்த நரப் பிசாசுகளே! ஞாபகமிருக்கட்டும், இவ் விதமென்னை யேமாற்றி இன்று விதவையாக்கியதற்குக் கடவுள் தகுந்த தண்டனைகொடுப்பார். இச் சென்மத்திலேயே உங்கள் தீவினையின் பலன் உங்களுக்குக் கிடைக்கும்!"

## 6

ஒரு வருஷத்திற்குப் பின்: ரமாவின் வீட்டிருந்து லக்ஷ்மி விடைபெற்றுக் கொண்டாள். அக்காளும் (மூதேவி) அடியெடுத்துவிட்டாள். ரமாவும் சோமனும் விபரீத நட்பிலிறங்கி விட்டார்கள். இதில் ஆச்சரியமொன்று மில்லை. இவ்விதம் சம்பந்த மேற்படுவது அவ்வளவு கஷ்டமான காரியமல்ல. ஓர் கிழவன் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வியலாம விருக்கையில் ஓர் யௌவனப் பெண் தன் உணர்ச்சிகளை யெங்ஙனம் அடக்கிக்கொள்ள முடியும்? கேட்பானேன்! பரிகாசம் போலக்கடித்தது பாம்பு; பல்பேரறிய வீங்கிவிட்டது! எவ்வளவு காலம்தான் ரகஸியம் வெளியாகாதிருக்கும்? ரமாவும் சோமனும் வேறு படுத்தப்பட்டார்கள். முடிவில் ரமாவும் ஜாதியை விட்டுத் தள்ளப்பட்டாள். பலவந்தமாய் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டாள். பாவம்! ஆதரவற்ற ரமா அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்த் தன் அன்னை தந்தையரைச் சபித்துக்கொண்டே பிராணத்யாகம் செய்துகொள்வதென்ற முடிவுக்கு வந்துவிட்டாள்.

தினமணியும் மலைவாயிலில் மறைந்தான். பூதேவி இருளென்னும் போர்வையில் மறைந்தாள். சிவநாத நதி ஓர் திக்கற்ற அபலைக்கு அடைக்கலம் அளிக்கும் பாக்யம் நமக்குக் கிடைக்குமோ வென்று ஏங்குவது போல் நிச்சப்தமாய் விளங்கிற்று. ரமா கரையிலே உட்கார்ந்து கொண்டு சிந்தனையி லாழ்ந்திருந்தாள். மத்தியில் "வஞ்சக உலகம்!" என்ற சொற்கள் அவள் வாயினின்றும் கிளம்பின.

இதற்குள் ஓர் சத்புருஷர் அவ்விடம் வந்து சேர்ந்தார். ரமா

வின் நிலைமையைக் கண்டு அவர் கல்லாய்ச் சமைந்து நின்றார். அவள் துன்பத்திலாழ்ந்திருக்கும் ஓர் திக்கற்ற அபலையென்று எளிதில் அறிந்து கொண்டார்.

"தங்காய்! நீ யாரம்மா?" என்று அன்பான சொற்களில் வினவினர்.

"அண்ணா! நான் யாரென்பது எனக்கே தெரியவில்லையே!" என்று கண்ணீரைப் பெருக்கிக்கொண்டே கூறினாள்.

"தங்காய்! நீ அழுது புலம்புவதன் காரணமென்ன; நீ யாரென்பதை எனக்கேன் தெரிவிக்கத் தயங்குகின்றாய்? பயப்படாமற் சொல்லம்மா? கடவுளின் மேல் ஆணை என்னிடம் ஒரு விஷயத்தையும் மறைக்காதே!" என்று திரும்பவும் பிடிவாதத்துடன் வினவினார்.

"அண்ணா! தயவு செய்து என்னைப்பற்றிய விருத்தாந்தங்களைக் கூறும்படி யென்னை வற்புறுத்தாதீர்கள்" என்று கூறிவிட்டு மௌனத்திலாழ்ந்தாள். மறு நிமிஷம் நெட்டுயிர்ப்புடன், வஞ்சக உலகம்" என்று கூறினாள்.

"தங்காய்! என்னைக் குறித்து நீ அஞ்ச வேண்டாம். நான் ஒரு போக்கிரியோ, திருடனோ, சண்டாளனோ அல்லது கெட்ட நடத்தையுள்ளவனோ என்று நீ சந்தேகப்பட வேண்டாம். என்னால் ஒரு தீங்கும் உனக்கேற்படாது. இயன்றவரையில் உனக்கு உதவி புரிவேன். உன் மனதிலுள்ள ஒவ்வோர் விஷயத்தையும் ஒழிக்காமல் என்னிடம் சொல்வாயாக" என்று வற்புறுத்திக் கேட்டார்.

ரமாவால் மேலும் தன் பிடிவாதத்தைச் செலுத்த முடியவில்லை. "அண்ணா! நான் ஹிந்து சமூகத்தின் கொடுமைகளாற் பீடிக்கப்பட்ட ஓர் அநாதை விதவை!" யென்று கூறி மேலே நாவெழாமல் நிறுத்தினாள். மறு நிமிஷம், "வஞ்சக உலகம்" என்று கூறினாள்.

வந்தவர் முடிவில் பிடிவாதத்தால் ரமாவின் மனத்திலுள்ள விஷயங்களை யெல்லாம் அறிந்துகொண்டார். அவளுடைய வரலாறுகளைக் கேட்ட அவரும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடிய

வில்லை. திடீரென்று இருவரும் சேர்ந்தாற்போல் "வஞ்சக உலகம்" என்று வெறுப்புடன் வெளியிட்டனர். ரமா சிறிது ஐயத்துடன் வந்தவருடைய குரலைக் கவனிக்கவே அவர் தன் பால்ய நண்பர் மோஹன் என்பது தெரிந்தது.

மோஹன் ரமாவைத் தன் இல்லத்திற் கழைத்துச் சென்றான். 4, 5 தினங்கள் மிக்க மரியாதையுடன் தன்னிடம் வைத்துக்கொண்டிருந்தான். பின்பு விதவா ஆஸ்ரமத்திற்குச் செய்தியறிவித்தான். மறுதினம் ரமாவைத் தன்னுடன் அழைத்துச் சென்று ஆஸ்ரமத்தில் சேர்ப்பித்துவிட்டு, "நல்லது, தங்காய்! நான் விடைபெற்றுக்கொள்கிறேன் எனக்குச் செல்ல அனுமதி கொடு" என்றான்.

'விடை கொடு' என்ற சொற்களைக் கேட்கவே ரமா திடுக்கிட்டாள். 'அண்ணா! இதென்ன விந்தை! என்னை வேற்றூரிடம் ஒப்புவிக்க எவ்வாறு துணிந்தீர்?' என்று கூறி மளமளவென்று கண்ணீருதிர்த்தாள்.

"தங்காய்! கவலைப்படாதே. நான் செல்கிறேன். அடிக்கடி உன்னை வந்து பார்த்துக்கொள்கிறேன். எவ் விஷயத்தைக் குறித்தும் நீ கவலைப்படவேண்டாம். இவ்வாஸ்ரமத்தை என் வீட்டைப்போல் நினைத்துக்கொள். நான் சென்றுவருகிறேன்" என்று கூறி விடைபெற்றுத் திரும்பினான்.

வழியில் மோகனுடைய காதுகளில் "வஞ்சக உலகம்" என்ற சொற்கள் ஒலித்துக்கொண்டே யிருந்தன.

---

## கல்யாண விமரிசை.

விவாகம் என்பது ஒரு வாழ்க்கை ஒப்பந்தந்தான் என்பதை வெகு சில சமூகங்களே ஏற்றுக்கொண்டிருக்கின்றன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில், ஒரு ஆடவரும் ஒரு பெண் மகளும் விவாகம் செய்தால், மத சம்பந்தமாகவும், சமூக சம்பந்தமாகவும், சட்ட சம்பந்தமாகவும் இருவரும் சம அந்தஸ்தில் வாழ்க்கைக் கூட்டா

ளிகளாக ஒப்பந்தஞ் செய்துகொள்வதாகக் கருதப்படுகிறது. மணம் செய்வதின் லட்சியம் இதுதான் என்று சொல்கிறார்கள். இந்த மாதிரி கருதும் முறையும் வழக்கமும் வேறு நாடுகளில் அனேக மாக இல்லையென்றே சொல்ல வேண்டும். பிற நாடுகளில், ஒன்றில் புருஷனுக்கு அல்லது மனைவிக்கு உயர்ந்த அந்தஸ்து அல்லது உரிமை அளிக்கப்படுவதைக் காண்கின்றோம்.

சில வருஷங்களுக்கு முன்வரையிலும், பால்கன் நாடுகளில் ஒரு விசித்திர வழக்கம் அனுஷ்டிக்கப்பட்டுவந்தது. அதாவது மணச் சடங்கு முடிந்ததும், மணப் பெண் எல்லோர் முன்னிலையிலும் மணமகனிடம் ஒரு சாட்டையைக் கொடுக்கவேண்டும். என்றும் கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக வாக்குறுதி யளிப்பதற்கு இந்தச் சாட்டை ஒரு அடையாளமாகக் கருதப்படுகிறது. புருஷனும் மனைவியும் ஒற்றுமையாகவும், இன்பமாகவும் வாழ்க்கை நடத்தினால் இந்தச் சாட்டைக்கு வேலையில்லாமற் போய்விடும் அல்லவா? இருந்தாலும் இது மனைவியின் அந்தஸ்தைக் குறிப்பதற்கு ஒரு நல்ல அடையாளமாகக் கொள்ளப்படுகிறது. அல்பேனியா தேசத்தில் இன்றும் இவ் வழக்கம் அனுஷ்டானத்தில் இருந்துவருகிறது. மணச் சடங்கு நடக்கும்போது, நம் நாட்டிலிருப்பதுபோன்று அங்கும் பெண் வாய்மூடி மௌனியாகவே இருப்பாள்; அவளுடைய சார்பில் தமையனோ தந்தையோ எல்லாக் காரியங்களையும் நடத்துவார்கள்.

எகிப்தில் கல்யாணம் முடியும் வரை, பெண்ணுக்கு மாப்பிள்ளையைப் பார்க்க முடியாது. இந்த வாழ்க்கை ஒப்பந்தம் மூன்றாவது மனிதரை வைத்தே நடத்தப்படுகிறது. பெண்ணின் தந்தையே சகல காரியங்களையும் நடத்துவார். சடங்குகளெல்லாம் முடிந்த பிறகு, பெண்ணும் மாப்பிள்ளையும் முதன் முதலாக ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற் கென்று ஒரு சடங்கு தனியாக நடத்தப்படும்.

சீனாவிலும் அப்படித் தான். பெண், புருஷன் வீட்டுக்குப் போன பிறகுதான், தன் புருஷனை அறியமுடியும். அங்கு புருஷர்களுடைய சௌகரியத்தை உத்தேசித்தே கல்யாணம் பெரும்பகுதியும் நடத்தப்படுகிறது. தாய்தந்தையரே எல்லா விஷயங்களை

யும் முடிவு செய்து கொள்வார்கள். ஒருவருக் கொருவர் மனப் பொருத்தம், உடல் பொருத்தம் ஒன்றையும் கவனிப்பதில்லை. புருஷன் பெரிய தனவானாக இருந்தால், அவனிஷ்டப்படும் பெண்ணை இரண்டாவதாக மணமுடித்துக் கொள்வான்.

ருஷ்யா தேசத்தில் கல்யாணம் மிகக் குறுகிய காலத்தில் நடைபெற்று முடிந்துவிடும். ஹோட்டலில் சாப்பிடுவதுமாதிரி. உள்ளூர் ரெஜிஸ்திரார் ஆபீசுக்கு மணமகனும் மணமகளும் செல்ல வேண்டியது; சாட்சிகள் முன்னிலையில் பிரமாணத்தில் கையெழுத்திட வேண்டியது. வேறு எந்த விதமான ஒப்பந்தமும் செய்ய வேண்டியதில்லை. பரஸ்பரம் சம்மதத்துடன் விவாக ரத்து செய்து கொள்வதும் அங்கு வெகு சுலபந்தான். உலகில் 21 தேசங்களில் புருஷன் நினைத்தால் மனைவியை எளிதாக விவாக ரத்து செய்யும் வசதியிருக்கிறது. அல்பேனியா, தென் அமெரிக்கா, இராக், எகிப்து, பெர்ஷியா, சையாம், துருக்கி முதலிய நாடுகளெல்லாம் இந்தக் கூட்டத்தில் சேர்ந்தவை.

பிரான்ஸில் காதலைப்பற்றி அதிகம் எழுதுகிறார்கள்; ஆனால் நடை முறையில் அங்கு காதல் அதிகமிருப்பதைக் காணோம். கல்யாண நிச்சயமெல்லாம் பத்திரிகை விளம்பரங்கள்மூலம் பண்ணிக் கொள்ளலாம். நேரிற்பார்த்துக் காதல்கொள்ள வேண்டியதில்லை. மணச் சடங்கின்போது, மண மகளுக்குப் புதிதாகக் கிடைத்துள்ள விசேஷ உரிமைகளை விளக்கிப் பிரசங்கம்புரிவது வழக்கம்; ஆனால் சமீபகாலத்தில் இதை நிறுத்திவிட்டார்கள்; தம்பதிகள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அந்யோன்யமாகயும், விசுவாசத்துடனும் நடந்து கொள்ளவேண்டும் என்று இப்பொழுது உபதேசம் செய்கிறார்கள்.

ஜர்மனியிலும் சதிபதிகள் அனேகமாக சம அந்தஸ்திலேயே கருதப்படுகிறார்கள். ஆனால், இந்நாளில், புதுத் தம்பதிகளுக்கு, அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து சுமார் 20 பவுன் நன்கொடை கிடைக்கும். குடும்ப வாழ்க்கையில் புகுவது அங்கு சர்க்காருடைய பாராட்டையும் பெறுகிறது. அத்தோடு 'குடும்ப வாழ்க்கை' யெனும் ஹெர் ஹிட்லருடைய புத்தகமொன்றையும் பரிசாகப் பெறக்கூடும். அங்கு ஒரு விசேஷ மென்னவென்றால், நூற்றுக்

கணக்கான கல்யாணங்களை ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் நடத்துவார்கள். கலியாண ஊர்வலம் வெகு ஜோராக இருக்குமல்லவா? செலவும் சுருக்கம்.

இத்சாலியில் கல்யாணம் செய்து கொண்டால், அரசாங்க உதவி நிதி கிடைக்கும். கல்யாணம் முடிந்ததும், அதுவரைச் செலுத்திவந்த 'பிரம்மசாரி வரி' புருஷனுக்கு மிச்சப்படும். ஐந்து குழந்தைகளுக்கு மேல் பெற்று விட்டால், அரசாங்கத்திலிருந்து இன்னும் பல உதவித் தொகைகள் கிடைக்கும். ஆறு குழந்தைகள் பெற்றதும் ஒரு சிறந்த பிரஜையென்று சர்வாதிகாரியே தம்பதிகளுக்கு ஒரு 'ஸர்டிபிகட்' அளிப்பார்.

கீழ் நாடுகளில் மனைவியர் எப்படி நடத்தப்படுகின்றனரோ அதற்கு நேர் விரோதமாக இருக்கின்றது அமெரிக்க நிலைமை. அங்கு பெரும்பாலும் சர்ச்சில் கல்யாணம் நடப்பதில்லை; நகர மண்டபத்தில்தான் அதிகமாக நடக்கும். சரியான லைசன்ஸிருந்தால், பகலிலோ இரவிலோ எச்சமயத்திலும் மிக லேசாகக் கல்யாணத்தை நடத்தி விடலாம். சில மாகாணங்களில் இன்னும் லகுவாக வைத்திருக்கிறார்கள் கல்யாணச் சடங்கை. நல்ல ஆரோக்கியத்துடனிருப்பதாக டாக்டர் ஸர்டிபிகட் வைத்திருந்தால்தான் சில மாகாணங்களில் கல்யாணத்துக்கு அனுமதி கிடைக்கும். அங்கு பெண்களுக்கு அதிக உரிமைகள் அளிக்கப்படுகின்றன. ஒரு மனைவி தன்னுடன், தன் தங்கை, தாய் அல்லது வேறு நெருங்கிய சுற்றத்தார் யாரையேனும் புக்ககத்துக்குக் கூட்டி வந்து தன்னுடன் வைத்துக் கொள்ளலாம் என்று அமெரிக்க நீதி மன்றங்கள் சமீபகாலத்தில் தீர்ப்பளித்திருக்கின்றன. இதற்கு நேர் மாறாக, மனைவி கேட்டால், அவளுக்கென புருஷன் தனி வீடொன்று அமர்த்திக் கொடுக்க வேண்டும்; புருஷனுடைய தந்தையுடன் சேர்ந்து வாழ வேண்டுமென்று மனைவியை வற்புறுத்த முடியாது. விர்ஜீனியாவில் ஒரு கேஸ் நடந்தது. புருஷன் தனது தமையனையுந் தன் வீட்டில் வைத்துப் பரிபாலிக்க விரும்பினான். மனைவி சம்மதிக்கவில்லை. வற்புறுத்தியதால் விவாக ரத்து செய்ய அனுமதி கோரினாள். அவளுக்கென்று தனியாக ஒரு வீடு அமர்த்திக் கொடுக்காவிட்டால், விவாக ரத்துக்குப் போதிய

காரணமிருப்பதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது; இப்படியாக அந்நாட்டில் 'மனைவி' சட்டத்தின் 'செல்லப் பிள்ளை'யாக இருக்கின்றாள்.

ஜப்பானில் ஒரு பெண்ணுக்குப் பருவம் வந்து விட்டால், அங்குள்ள பல 'மணப்பெண்கள் பள்ளிக்கூடங்கள்' ஏதாவது ஒன்றுக்குச் சென்று இரண்டு அல்லது மூன்று வருஷம் படிக்கலாம். பழக்க வழக்கங்கள், வீடு பராமரிப்பு, குடும்பம் எப்படி நடத்துவது, பிள்ளைகள் பராமரிப்பு, படிப்பு, தையல், வனப்புடன் வாழ்தல், சங்கீதம் முதலிய பல துறைகளிலும் பயிற்சி அளிக்கின்றார்கள். இவ்விடத்தில் பயிற்சி பெறாத ஒரு பெண்ணுக்கு அவள் எவ்வளவு அழகாயிருந்தாலும் நல்ல நிலைமையிலிருக்கும் புருஷன் கிடைப்பது அந்நாட்டில் அபூர்வந்தான்.

உலகிலேயே கல்யாணஞ் செய்துகொள்வதற்கு மிக மிக மோசமான நாடு பெர்ஷியாதான். அங்கு ஒருபெண்ணை, சாதாரண மேஜையைவிடக் கொஞ்சம் உயர்வாகக் கருதுகிறார்கள்; நல்ல ஒட்டகத்தையும் விடக் குறைவாகத்தான்!

இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள நாட்டு வழக்கங்களெல்லாம், அந்தந்த நாடுகளில் பொதுவாக, சாதாரண மனிதர் அனுஷ்டிக்கும் வழக்கங்கள் தான். நல்ல உயர்ந்த அந்தஸ்திலிருப்பவர்கள் பிரிட்டிஷ் வழக்கத்தையே கைக்கொள்ள விரும்புவதைக் காண்கின்றோம்.

---

# விவாக ரத்து

(சோ ராம்)

இத் தலைப்பைக் கண்டதும், சில வைதீகப் புலிகளும், பெண்களை விலைக்குவிற்கும் பேர்வழிகளும், காதலற்ற கடின மணத்தைச் செய்யும் கயவர்களும், இள நங்கைகளை மறுமணம் செய்துகொள்ள ஆவல்கொண்டிருக்கும் அறுபது வயது தாத்தாக்களும் வருந்தலாம். வருந்தி யாது பயன்? காலச் சக்கரம் மாறுவது போல் யாவும் மாறவேண்டுமல்லவா?

தற்காலம் உலகமிருக்கும் நிலைமையில் இனி விதவா விவாகமும், விவாக ரத்தும்தான் அவசியம் வேண்டும். ஏனெனில் மக்களைப் பெற்ற மாதா பிதாக்கள் பணம் என்ற பேயின் வசப்பட்டு, தம் மக்களுக்குக் காதலற்ற கடின மணத்தைச் செய்து, கடைசி வரையில் கண்கலங்க விடுகிறார்கள். இன்னமும் மணமென்பது பணத்தின் பெயரால் நடக்கிறதே யன்றி, காதல் மணம் அதிகம் நடந்ததாகத் தெரியவில்லை. காரணம் பெற்றோர்களின் பணப் பேராசைதான். விதவா விவாகத்தைப்பற்றிப் பல பெரியார்களும், அறிவாளிகளும் இதுவரை எழுதிவந்திருக்கிறார்கள். அதையே மேலும் நான் அதிகம் எழுதவேண்டுமென்பதில்லை. 'விவாக ரத்து'ச் செய்யவேண்டிய அவசியமென்பதுபற்றியே எழுதுகிறேன்.

1. பொருத்தமற்ற மணம்: அதாவது அறுபது வயது சென்ற பல்லுப்போன 'பால'கருக்கு பன்னிரண்டு வயது நிரம்பப் பெருத பாலகியை விவாகம் செய்விப்பது.

2. அழகிலும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கும் அறுநான்கு வயதுடைய வாலிபனுக்கு, அக்னி பகவானுக்கு அபிஷேகம் செய்த மாதிரி நிறமுடைய, படிப்பு வாசனையையும், நாகரீகத்தையும் கனவிலும் கருதாத நங்கையைப் பிடித்துக் கட்டுவது.

3. அழகிலும் அறிவிலும் அடக்க ஒடுக்கத்திலும், படிப்பிலும் முதன்மை ஸ்தானம் வகித்துள்ள ஒரு மங்கையை, சிவலிங்கத்தைப் போல் வழுக்கைத் தலையும், ருத்ராக்ஷக் கொட்டையும், பொய்யொழுக்கமும் காதலென்றால் பணத்திற்கு எத்தனை படி என்று கேட்கும், அழகிலா மன்மதருக்குக் கொண்டுபோய்க் கொடுப்பது.

இன்னும் இதுபோன்ற எத்தனையோ பொருத்தமற்ற விவாகங்கள் நமது நாட்டில் நடக்கின்றன. இவ்விதம் பொருத்தமில்லாத மணம் செய்வதால், பிள்ளை தாசிவீடும் பெண் தவசிப்பிள்ளையுமாக இருந்து கெட்டலைய நேரிடுகிறது. பெண்ணோ ரகசியத்தில் கெடுவதுடனிருக்கிறாள். பிள்ளையோ மிகவும் கேவலமான நிலைக்குவந்து, தாசிக்குக் கொடுக்கத் தனமில்லாது, கண்டவர்களிடமெல்லாம் கடன்வாங்கிக் கெட்டலைகிறான். சமயத்தில் தாசி மோகத்தினால், திருடவும் கொலைசெய்யவும்கூட அவனுடைய மதி இடங்

கொடுக்கிறது, ஏன்? அவன் மனதிற்குகந்த மனைவியாயிருந்தால் மறுமாதிடம் மனஞ் செல்லுமா? மறு மாதர்களை விரும்புவதெல்லாம், எதற்கு? தன் மனைவியிடம் அன்பாயிருந்தாலென்னவென்று சிலர் நினைக்கலாம். அப்படி நினைப்பது சரியல்ல. பெண்களில் சிலருக்கு சுத்தமாக இருக்கத்தெரிகிறதில்லை. கணவன் இன்னவிதம் இருக்க வேணுமென்று சொன்னாலும் கேட்பதில்லை. அப்படி கணவனைக் கவர்ச்சி செய்யும் பெண்கள் சமூகத்தில் 100-க்கு 20 பேர் இருக்கலாம். பாக்கி பெண்களெல்லாம் சட்டியைக்கழுவி முந்தானையால் துடைப்பவர்களாகவேதான் இன்னமும் இருந்து வருகிறார்கள்.

விவாகரத்துச் செய்துகொள்ளும் வழக்கம் வந்தால் இன்று சமூகத்தில் 100-க்கு 80பேர்கள் பிள்ளைக்குப் பெண் பிடிக்காமலும் பெண்ணுக்குப் பிள்ளையைப் பிடிக்காமலும், விவாகரத்துச் செய்துக்கொள்ளத் தயாரிலிருக்கிறார்கள். காரணம் மனப்பொருத்தமில்லாத மணம் செய்வித்ததுதான்.

ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் வழங்கும் சமூகத்தில், ஆண்கள் தன் மனைவி தனக்கு எவ்வித காரணத்தைக் கொண்டும் பிடித்தமில்லா விட்டாலும், அல்லது அழகில்லா விட்டாலும், அவள் விபசாரம் செய்தாலும், உடனே அவளை விலக்கி, வைத்துவிட்டு வேறு விவாகம் செய்து கொள்ளலாம். ஆனால் பெண்ணுக்குப் பிள்ளையைப் பிடிக்கா விட்டாலோ மறு விவாகம் செய்துகொள்ள முடியாது. இல்வாழ்க்கை யென்பது ஆண், பெண் இருவருக்கும், ஒரு விதமேயன்றி ஆணுக்கொரு விதமும், பெண்ணுக்கொரு விதமுமாக நீதி நூல்கள் கூறவில்லை. கவிச்சக்ரவர்த்தி பாரதியார் கூறுவது போல்,

கற்பு நிலை என்று சொல்ல வந்தாரிரு
கக்ஷிக்கு மஃதைப் பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத் தைத்தள்ளி மிதித் திடுவோம்

என்று பாடியிருக்கிறார். மேலும் மற்றொரு பெரியார்:—

தன்னகத்தே யொருமனையாள் தானிருக்கத்
தானொருவன் மனையாள்மேல் இச்சை கொண்டால்

பின்னொருவன் தன்மனையில் புகும்போது,
பெண்ணணங்கோ டவர்தனையும் வெறுக்கலாமோ
உன்னகத்து ளாசையைப்போல் அவர்க்கிராதா
உன் மானம் போலலவோ அவர்தம் மானம்
மன்னவனே பிறர் மனையை நோக்காவண்ணம்
வள்ளுவனார் குடித்தனம் போல் வாழ்தல் நன்றே

என்றும் பாடியிருக்கிறார். பாரதத்திலும் ஒரே தாயின் வயிற்றி லுதித்த ஐந்து சோதரர்களை, ஒரு பெண் மணந்து, வருடத்திற் கொருவரிடம் இல்வாழ்க்கையை நடத்தி வந்திருக்கும்போது கணவனே வேண்டாமென்று விலக்கிவிட்டு வேறு மணஞ் செய்து கொண்டால் தள்ளப்பட்ட பெண்ணும் தன் மனத்திற் குகந்த மணாளனை மறுமணஞ் செய்து கொள்ளலாமல்லவா? ஒரு தாயின் வயிற்றிலுதிக்கும் ஆண் பெண்களில் ஆணுக்கொரு நீதி யும் பெண்ணுக்கொரு நீதியுமாக சமூகத்தார் செய்வது மிகவும் அறிவீனமான செய்கையாகும்.

ஆண்கள் மாத்திரம் பெண் பிடிக்கவில்லை யென்று வைத்து விட்டுச் செய்யும்போது, பெண்கள் மட்டும் ஏன் பிள்ளையைப் பிடிக்கவில்லை யென்று கூறிப் பிறிதொரு மணஞ் செய்துகொள்ள லாகாது? காரணம் கேட்டால் சட்டம் இடம் கொடுக்கவில்லை யென்று சொல்லலாம். இதற்கு விவாக ரத்து என்ற சட்டம் இருக்குமேயானல் ஆண் பெண் இரு வகுப்பாருக்கும், எவ்வித கஷ்டமுமில்லை என்பது கூறாமலே விளங்கும்.

நமது சகோதரியார் ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் அவர் கள் தற்போது மத்திய அசம்பிளியில் கொண்டுவந்திருக்கும் பல தார மணத்தடை மசோதாவும், நம் சோதரிகளுக்கு மிக நன்மை யளிக்கலாம். ஆனால் அச் சட்டத்தைப் பார்க்கிலும், விவாக ரத் துச் சட்டம் வேண்டுவதுதான் மிக அவசியம். ஏனெனில் பல தார மணத்தடைச் சட்டத்தின்படி ஆண்கள் எந்த விதத்திலும் எவ்வித காரணத்தையும் கூறி, தன் மனைவி தனக்குப் பிடிக்காவிட் டால் வைத்துவிட்டுச் செய்துவிடுவார்கள். அப்படிச் செய்தால் அவரால் ஒதுக்கப்பட்ட, அப்பெண்ணும் மறுமணம் செய்து கொள்ள விவாக ரத்து உரிமை வேண்டுமல்லவா? ஆனதால் எக்

காரணத்தாலும் நம் சமூகத்திற்கு ஏன் நம் இந்து மதத்துக்கே விவாக ரத்து உரிமை வேண்டுவது தற்கால உலகிற்கு மிகவும் அவசியமாக இருக்கிறது.

விவாக ரத்துச் சட்டம் ஏற்பட்டுவிட்டால் பெண்களெல்லாம் கற்புக் கெட்டுவிடுவார்களென்று ஒரு சிலர் கூறலாம். அப்படியானால் ஒற்றுமையற்ற தம்பதிகளில், 100-க்கு சிலர் கூடக் கற்புடனிருப்பது அரிது. மேலும் தன் கணவன் தன்னுடனில்லையென்று கள்ள நட்புக்கொள்ளும் ஒரு பெண் விவாக ரத்துச் செய்துகொள்ள சட்டமிருந்தால் பகிரங்கமாக விவாக ரத்துச் செய்துகொண்டு ரகசியத்தில் கெடாமல் தன் மனதிற்குகந்த மணாளனை மறுமணஞ் செய்துகொள்ளலாமல்லவா? கூர்ந்து நோக்குங்கால் நம் நாட்டுக்கு விவாக ரத்துச் சட்டம் வருவது நன்மையே தவிர வேறில்லை.

ஆனதால் பெரியோர்களே! சட்டசபை அங்கத்தினர்களே! இப்போது நமது சகோதரியார் கொண்டுவந்துள்ள பலதார மணத்தடைச் சட்டத்தைப் போல, விவாக ரத்துச் சட்டமும் கூடிய விரைவில் செய்து பொருத்தமற்ற மணங்களால் புண்பட்டு புழுவைப்போல் துடித்துக்கொண்டிருக்கும் தம்பதிகளுக்குப் புத்துயிர் அளிப்பீர்களாக.

---

கருணை உள்ள இடத்தில் —

— — விதவை இல்லை.

# அன்பு நாட்டில் அமங்கலையா!

( S. சிவப்பிரகாசம், புதுவை )

அன்புளமே இல்லாத மனிதர் தம்மை
ஆர்ந்திட்ட நல்லறிவுப் பெரியோ ரெல்லாம்
என்புறுதோல் போர்த்திட்ட ஈன ஜென்மம்
என்றுரைத்தார்! ஈதறிந்தோம். உயிர்கள் மீது
நன்மனமே கொண்டதற்குத் தீமையின்றி
நலம் பலவும் செய்கின்றோம்; ஆனால் அந்தோ!
வன்புறுத்தும் மதம்பேசி மாதர் தம்மை
மாத்துயரில் ஆழ்த்துகின்றோம்; அறிந்தோமில்லை!

பெண் ஜன்மம் பாவமெனப் பேசிப் பேசிப்
பேதைமையை வளர்த்துவிட்டார் சூழ்ச்சிமக்கள்!
கண்ணிரண்டில் பாவபுண்ணி யந்தான் செய்த
கண் ணுண்டோ, சொல்லிடுவீர்? சமுகத்திற்குப்
பெண் ஆணும் கண்போன்று விளங்குகின்ற
பெற்றியினை யறியாதார் மனிதர் தாமோ?
மண் ணுலகில் இக் கொடுமை எங்குங் காணோம்
"மகிமையுற்ற" இந்நாட்டில் வாய்ந்த தேனோ?

மாதர்க்கு மணவுரிமை யளிப்பதில்லை!
வாழ்விலவர் படுந்துயர்க்கோ மாற்றுமில்லை!
காதனிழந் தாலவர்கள் மீண்டும் வேறோர்
நாயகனை மணப்பதற்கும் உரிமை யில்லை!
நீதியிலா முறையேனும் மறுமணந்தான்
நினைத்தபடி யேசெய்வர் ஆண்க ளெல்லாம்!
வேதமுதல் அன்னவர்க்குச் சான்று கூறும்!
விதவை நிலைக் கிரங்கிடுவார் யாரு மில்லை!

படமுடியாத் துயர்க்கடலில் நீந்தும் அந்தப்
பதியிழந்தோர் கரையேற மார்க்கஞ் சொன்னால்,
குடிமுழுகிப் போச்சென்றே வைதீகத்தின்
குடுக்கையெலாம் ஆர்பாட்டம் செய்யுமிங்கே!
அடர்புதரில்-சாக்கடையில் சிசுவைக் கண்டால்

அவமானம் நேர்ந்ததென ஆடும் அந்த
விடமனையோர் மறுமணத்தை மறுப்பதெல்லாம்
விதவையினை வேட்டையிட எண்ணியன்றோ!

கடவுளரின் ஆணையெனில் விதவைத் தன்மை,
கணவன்மார் மாண்டவுடன், காதல் வெள்ளம்
சுடர்க்கொடியாள் உளம்விட்டு மாய்தலின்றிச்
சுடுநெருப்பாய்த் தோன்றுவதேன் பக்தி மக்காள்!
அடக்குமுறை யாலவர்கள் காதல் தீயை
அணைத்துவிட நீர் எண்ணும் முயற்சியெல்லாம்,
படிதனிலே சமதர்மம் காப்போர் எண்ணம்
பாழாக்க முயற்சிப்போர் செய்கை யொக்கும்!

காரிகைதான் சிற்றின்பம் வேம்பென்றாலும்
கைக்கொள்வர் பக்குவத்தே என்றார் முன்னோர்.
சீரிளமை அழகார்ந்த விதவை மங்கை
சிற்றின்பம் வேண்டாளோ? இயற்கையன்றோ!
பேரின்பம் வேண்டிமிகத் தவஞ்செய்தோரும்
பிழைபட்டார் எனக் கண்டும், இரக்க மற்றே
சீரழிந்த விதவையர்க்குத் துன்பஞ் செய்து
சித்ரவதைக் காளாக்கல் நன்றோ சொல்வீர்?

---

# இந்து மாதர் விண்ணப்பம்

பம்பாய் மாகாண மாதர் சங்கத்தார் இந்து மாதர்களுடைய குறைகளை விளக்கி, இந்தியா கவர்ன்மெண்டுக்கு ஒரு விக்ஞாபனம் அனுப்பியிருக்கின்றனர். தற்சமயம் அமுலிலிருக்கும், ஹிந்துச் சட்டப்படி, பெண்கள், சொத்துரிமை வார்சுரிமை, விற்பனை யதிகாரம், மண உரிமை, விவாகரத்து உரிமைமுதலிய பல விஷயங் களிலும் எவ்வாறு பாதிக்கப் படுகிறார்கள் என்பதை இவ் விக்ஞாப னம் விரிவாக விளக்கி பெண்களுக்குப் போதிய சுதந்திரம் கிடைக் கத்தக்க விதத்தில் சட்டத்தைத் திருத்தி யமைக்குமாறு கேட்டு

க்கொள்ளுகிறது. அதில் குறிப்பிட்டுள்ள முக்கிய விஷயங்கள் வருமாறு:—

## கல்யாணம்

(1) பலதார மணத்துக்குத்தடை

(2) சாதிவேற்றுமை அல்லது சமூக வேற்றுமை,( கலப்பு) மணங்கள் சட்டப்படி செல்லத்தக்கனவாக இருப்பதற்குக் குறுக்கே நின்று தடை செய்யக்கூடாது.

(3) வயதுப் பொருத்தமற்ற முறையில் செய்யப்படும் மணங்களுக்குத் தடை விதித்தல். உதாரணமாக 55 வயதுக் கிழவன் 15 வயதுப் பெண்களை மணக்க அனுமதிக்கக் கூடாது.

(4) கல்யாணத்துக்கு முன் அறிவிக்கவும், பின்னர் ரெஜிஸ்தர் செய்வதும்.

(5) ஒரு விதவை மறு மணம் செய்து கொண்டால், அவள் தனது புருஷனுடைய சொத்தின் மீதுள்ள உரிமையை இழக்கக் கூடாது.

(6) ஒரு தந்தை மரித்தால், அல்லது பைத்தியம் பிடித்தோ வேறு காரணத்தாலோ கார்டியனாக இருக்க லாயக்கற்றுப் போனால், மைனர் குழந்தைகளுக்கு அவர்களுடைய கல்யாண சம்பந்தமாக தாயே கார்டியனாக இருக்கும்படி செய்ய வேண்டும். போதுமான காரணங்கள் இருப்பதாகக் கோர்ட்டுக்குத் தெரிந்தால் கோர்ட்டு அவளை கார்டியனாக நியமிக்காமல் வேறு யாரையேனும் கார்டியனாக நியமிக்கலாம்.

## விவாக ரத்து.

(1) புருஷன் அல்லது மனைவி இறந்து போனால், அல்லது ஏழு வருஷ காலங்களுக்கு உயிருடனிருப்பதாக எவ்விதத் தகவலும் கிடையா திருந்தால்,

(2) அல்லது மதம் மாறினால்

(3) அல்லது பைத்தியம் எனத் தீர்மானித்தால்

(4) அல்லது விபசாரஞ் செய்தால் புருஷன் அல்லது மனைவி தம் மனைவியையோ புருஷனையோ விவாகரத்து செய்து

கொள்ள உரிமை யளிக்க வேண்டும். புருஷன் தன் மனைவியை சதா கஷ்டப் படுத்தினாலும், அவளைப் பராமரிக்காமல் உதாசீனம் செய்தாலும் மனைவிக்கு விவாகரத்துச் செய்ய உரிமை யளிக்க வேண்டும்.

ஒரு விதவை மறு மணம் செய்து கொண்டாள் என்ற காரணத்தைக் கொண்டு மட்டும், அவள் தனது மைனர் குழந்தைகளுக்கு கார்டியனாக இருக்கக் கூடாது என்ற தடை அகற்றப்பட வேண்டும்.

### வார்சுரிமை

ஒரு பெண், (அவள் விதவையாயிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி) அவளுக்கு வார்சுரிமை முறைப்படி கிடைக்கும் சொத்து, அவளுக்கு சர்வ பாத்தியதைகளும் உடையதாக இருக்க வேண்டும். ஒரு மகளுக்கு, பாகித்த அல்லது கூட்டுக் குடும்பச் சொத்தில், ஒரு மகனுக்கு எவ்வளவு விகிதம் கிடைக்கின்றதோ அதில் குறைந்த அளவு மூன்றில் ஒரு பங்கேனும் கிடைக்க வேண்டும்.

விதவைக்கு தன் புருஷனுடையவும், மகளுக்கு தன் தந்தையுடையவும் சொத்தில் பாகம் கிடைக்க வேண்டும்.

பரோடா, மைசூர் போன்ற முன்னேற்றமடைந்துவரும் சமஸ்தானங்கள் இவ்விஷயத்தில் கமிட்டிகள் நியமித்து இப்பிரச்னைகளைத் தீர்த்து வருகின்றன. அதேபோன்று, இந்திய கவர்ன்மெண்டாரும் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, சங்கத்தார் கேட்டுக் கொள்கிறார்கள்.

---

## "அவள் கதை"

(N. M. R. ராமச்சந்திரன்)

கடந்த வருஷமே பெண்ணின் விவாகத்தை நடத்திவிடலாமா வென்றிருந்திருப்பார். சகல இன்னல்களும் வந்து சம்பவித்து விடுகிறது, என்ன செய்வார்? இவ்வருஷமும், முதல் போகத்தில் விளைந்த தானியங்களை விற்று முக்கியமாக வேண்டிய

ஒரு மாடும், சில்லரைச் செலவும் செய்வதற்கே போதவில்லை. மூத்த மகளை, கடந்த மூன்ருவது வருஷம் விவாகம் செய்து கொடுக்க 500 ரூபாய் கடன் வாங்கியது வட்டியுடன் பூர்ண பக்ஷத்து சந்திரன் போல் வளர்ந்து கொண்டே போகிறது. இரண்டாவது போகத்தின் விளைவை விற்று வட்டிக்குக் கொடுத்தார். மூன்ருவது போகத்தில் விளைந்ததைக் குடும்பத்திற்கு உபயோகித்திருக்கலாம்.

இன்னும் என்ன என்ன கொடுமை! நமக்கென்ன தெரியும்? பூர்வம் ஒரு கவி கூறிய—

"ஆவின மழை பொழிய இல்லம் வீழ"

என்ற கவியின்படி யெல்லாம் நிகழ்ந்திருக்கலாம். பின்பு எப்படி விவாக காரியங்களை உரிய காலத்தில் செய்வார்? இப்படியே ருதுவாகி ஐந்து, ஆறு, ஏழு என்ற கணக்கவ்வளவு, மங்கைகளை விவாகம் செய்து கொடுக்க வழியின்றித் தத்தளிப்பதுண்டு.

இயல்பாக நினைத்துக்கொண்டு "என்னுடைய சகோதரி கௌமதியை" தெரியாத அண்டை அயலூரார்கள் "ஏன் ஐயா! இன்னும் கல்யாணம் செய்து கொடுக்கவில்லை குழந்தையை?" என்று கேட்பார்கள். ஐயோ! வருஷமெல்லாம் அந்தக் குழந்தையை நினைந்து நினைந்து கண்ணீர் உதிர்த்துக் கொண்டிருக்கும் எனக்கு இப்படிப்பட்ட கேள்விகள் எதிரியின் அம்புபோல் மார்பில் தைத்து மேலும் வேதனையை யுண்டுபண்ணும். அன்று ஒருவர் இதே போல் கேட்டதற்கு சொன்னேன்:

ஐயா! பெண்கள்—குழந்தைகள்—நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் தன்னை யறியாமல் மள மளவென்று வளர்ந்து மனுஷியாகிருர்கள். எல்லோருக்குமா அதிர்ஷ்டமிருக்கப்போகிறது? அவளுக்கொரு கிழட்டுப் பிணம் கிராப் சீவிக் கொண்டுவந்து விடுகிறது. பெற்ருரும் 'சந்தைக்குக்கொண்டு போன கத்தரிக்காய்போல' பொழுது போய்விடுமென்று விற்று நாசப்படுத்திவிடுகிருர்கள். அப்படியும் இல்லை. 'கௌமதி' யின் கல்யாணத்திற்கு முன்பே என்னுடைய அப்பா இறைவனடி சேர்ந்துவிட்டார், என்று கூறிக்கொண்டிருக்கும்போதே, இடையில் 'கௌமதிக்குக் கல்யாணமாகி!' என்று ஆச்சரியத்தோடு கேட்டார். கேளுங்கள். இறந்தபின் எனக்கிஷ்டப்பட்ட நல்ல வரனைத்தேடி

கல்யாணம் செய்துவைத்தேன். அந்த மைத்துனனுக்கு ரெங்கூனில் வியாபாரம். ஆதலால் கௌமதியைக் கூட அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்ற பிடிவாதத்தோடு முடக்குவாதமும் செய்தான். விவாஹம் முடிந்த ஆருவதுவாரம். அட விதியே! முதல்படியில் கால் வைக்கும்பொழுதே வழுக்கவாவேண்டும்?

என்னுடைய அம்மா அவனுக்கு இளைத்தவளாகஇல்லை. என் குழந்தையைக் கண்ட தேசத்துக்கெல்லாம் போகவிட முடியாதென்று ஒரே பிடிவாதமாய் ஒற்றைக்காலில் நின்றுள். நானும் சிபார்சுசெய்துபார்த்தேன். என் அம்மா விட்டுக்கொடுக்காமல் பேசினுள். மைத்துனன் அன்று கோபமாய் ரெங்கூனுக்குத் தனியாகப் போய்விட்டான். பிறகு ஒரு வருஷம் கழித்து ஒரு லட்டரில் 'கௌமதியை அனுப்பிவைப்பீர்களா இத்துடன் என்னை மறந்துவிட' சம்மதிக்கிறீர்களா?' என்று எழுதியிருந்தான். அதற்கு நாங்களும் சமாதானத்தோடே "ஐயா!ஐயா!! நீரும்போய் ஒரு வருஷத்திற்கு மேலாகிவிட்டது. ஆகவே, இவிடம் வாரும். சில மாதம் தங்கி போகும் பொழுது அழைத்துக்கொண்டு ,போகலாம்" என்று எழுதியிருந்தோம். அதற்கு சில மாதம்வரை பதிலே இல்லை. முளையிலே கிளை ஒன்பதாய் பிறந்தவன் பின் எப்படி கவிழ்ந்து விடுவானே என்று நான் எண்ணிக்கொண்டேன். எங்கள் சமூகத்தில் பெண்களை ருதுவாகி ஒரு வருஷம், ஆறுமாதத்திற்குமேல் வீட்டில் வைத்திருப்பது வழக்கமில்லை. கல்யாணஞ்செய்தும் நாம் வைத்துக்கொண்டு புருஷனுடன் போகவிடாமலிருந்தால் பார்ப்பவர்கள் பரிகாசம் புரிவார்கள் என்று நினைத்து அனுப்பிவைத்து விடுவோமென்று நிச்சயப்படுத்தினேம். அனுப்பிவைப்பதற்குமுன் கப்பலில் வந்து கூட்டிக்கொண்டுபோகும்படி ஒரு லட்டர் எழுதினேம். நான்கு நாளுக்குப்பின் ஒரு தந்தி வந்தது. அதில் "எனக்கு திரேக சௌகரியமில்லை, மனைவியை அனுப்பாதே நான் வருகிறேன்" என்றிருந்தது. இன்று பார்ப்பதுபோல அன்று தாபத்தோடு தந்தி வாசித்து முடிந்ததும் என்னுடைய கௌமதியின் முகத்தை நோக்கினேன். அன்றுதான் முதல்தடவை.

மறுபடியும் இரண்டாவது தந்தியொன்று வந்தது. அதைத் தெரிந்தவுடன், கதறி யிருப்போமென்று சொல்லவும் வேண்டுமோ?

அந்தத் தந்தியில் நல்லவேளையாக அப்படியொன்றும் அபாய விஷயம் இல்லை. "ஊருக்கு வர செலவுக்குப் பணம் கிடையாது. உடம்பும் மிகவும் கவலைக்கிடமாகி யிருக்கிறது. உடனே ரூபாய் 50 அனுப்பிவைக்கவும்" என்று வந்திருந்தது. ரூபாய் அனுப்பிய பதினைந்தாம் நாள் என் மைத்துனன் எலும்புக் கூட்டோடு காட்சியளித்தான். நான் அன்றே "இப்பொழுது பட்டுக்கொண்டிருக்கும் மனவேதனை" வருமென்று உரைலானேன்.

எங்களில் ஒருவருக்கும் அவன் இன்னாரென்று அடையாளம் தெரியவில்லை. அவன் எங்கள்வீடுதேடி வந்ததுதான் எங்களுக்கு அடையாளம். அவனுடைய ஊர் ஐந்தாவதுமைல். ஆள் அனுப்பி அனுடைய தாய் தகப்பனை வரவழைத்தோம். இந்தப் பாவி! தாய் தகப்பனுக்கு ஒரு பைஸா! ஒரு தபால் ஒன்றும் இல்லை. இப்பொழுது நினைத்தாலும்........உம்! வேதனையோடு வேதனையா........? வேண்டாம். அப்புறம், இதோ நிற்கும் இவளைப் பார்த்துப் யார்த்துக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும்படி........போகும் வழியாய்ப் போய்விட்டான்.

கதை சொல்லி முடிந்ததும் என்னெதிரில் உட்கார்ந்திருந்தவர் பெருமூச்சுவிட்டார். அவர் என்னைப்பார்த்து, தம்பி! இதேபோல்தான், இரண்டொன்றைத் திருத்தினால் என்னுடைய மகள் கதைபோலிருக்கும், என்று சொல்லிவிட்டு என்னுடைய சகோதரியை உற்றுப்பார்த்தார். மேலும், தம்பி! இந்தக் குழந்தையைப் பார்க்கும்பொழுது என்னுடைய மகளுடைய கவலையைப் பற்றி எனக்கு சிறிதும் தோற்றவில்லை என்றார். எனது கல்யாண விபரம் கேட்டார்; இல்லையென்றேன்.

தம்பி! என்னுடைய மகன் 18 வயது அடைந்தவன். அவனுக்கு இப்பொழுது ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்துக்கொண்டு வருகிறேன் கிடைக்கவில்லை. உனக்கும் கல்யாணம் ஆகவில்லை. உன்னைப்போல் நானும் ஒரு இளம் விதவையை வைத்துக்கொண்டு கண்ணீர் வடிப்பவன். பேசாமல் என்னுடைய மகளை நீ கட்டிக் கொண்டுவிடு. என்னுடைய மகனும் நன்றாகப் படித்தவன். கௌமதிக்கும் வயது 20க்குக் குறைவுதான். இவளைப்போல் அவனும் நல்ல அழகு; என்ன சொல்கிறாய்? இரண்டு கல்யாணத்தையும் சேரவைத்துவிடுவோம் என்றார். நான் 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது; அதுவும் நழுவி என் வாயில் விழுந்தது' என்று ஏற்றுக்கொண்டேன். இதை யாரும் மறுப்பார்களா? ஆகவே, இரு கல்யாணங்களும் மங்களமாக இனிது நடைபெற்றன.

# :: நிகழ்ச்சிகள் ::

## விதவா விவாகக் கணக்கு

1938-ஷ ஜூன் மீ நடைபெற்ற விதவா விவாகக் கணக்கு:—

ஜாதி வாரியாக:—

| | |
|---|---|
| பிராமணர் | 108 |
| க்ஷத்திரியர் | 49 |
| அரோடர் | 54 |
| அகர்வாலர் | 53 |
| காயஸ்தர் | 47 |
| ரஜபுத்திரர் | 42 |
| சீக்கியர் | 3 |
| பாடியர் | 1 |
| இதர வகுப்பு | 85 |
| மொத்தம் | ...442 |

மாகாண வாரியாக:—

| | |
|---|---|
| பஞ்சாப் | 120 |
| ஐக்கிய மாகாணம் | 88 |
| மத்ய மாகாணம் | 58 |
| பம்பாய் | 7 |
| வங்காளம் | 62 |
| மத்ய இந்தியா | 59 |
| மதராஸ் | 8 |
| பீஹார் ஒரிஸ்ஸா | 40 |
| மொத்தம் | ...442 |

## இளமை மணத்துக்குத் தண்டனை

தேவகோட்டை புதூர் யாதவ தெருவிலிருக்கும் காளிமுத்து சேர்வையின் 17-வயதுள்ள சகோதரி அலமேலுவை, அவர் சம்மதமில்லாமல் பெரியகருப்பன் சேர்வை மகன் காளிமுத்து சேர்வையும், ஷியார் மனைவி காளியம்மையும் ஷியார் மைத்துனர் காரைக்குடி நாச்சியப்பன் சேர்வையும்கூட்டிக்கொண்டு போய் காரைக்குடியில் நாச்சியப்பன் சேர்வை வீட்டில் 1ம் 2ம் எதிரிகளின் மகன் 13 வயதுள்ள குழந்தையென்பவனுக்கு 2-5-38ல் கல்யாணம் நடத்தினதாக தேவகோட்டை ஜாயிண்டு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடைபெற்ற வழக்கில், டாக்டர் பையனைப் பரிசோதனை செய்து அவனுக்கு 13 வயதே ஆகிறதென்று சொன்னதின் மேல், மாஜிஸ்திரேட் எதிரிகள்மீது இளமைமணத்தடை சட்டப்படி குற்றஞ்சாட்டி தலா 100 ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

## மன்னார்குடியில்

வேதாரண்யம் விஸ்வநாத சாஸ்திரிகள் தமது குமாரி பன்னிரண்டு வயதுள்ள சுந்தரகுஜாம்பாளை சேங்காலிபுரம் சுவாமிநாதனுக்கு ஜூன் 19-வ வேதாரண்யத்தில் மணஞ் செய்துகொடுத்ததாக ஷி விஸ்வநாதஅய்யர் மீதும் திருமணத்தை நடத்த உடந்தையாக இருந்ததாக சீதாலட்சுமிஅம்மாள் மீதும் இளமை மணத்தடைச்சட்டப்பிரகாரம் வழக்குத்தொடரப்பட்டதில் முதலாவது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டு "நான் குற்றவாளிதான்; எனது தாயும் பாட்டியும் குழந்தைக்குக் கல்யாணம் செய்துவிட வேண்டுமென்று வற்புறுத்தியதால் நான் அவளுக்குக் கலியாணம் செய்தேன்" என்று கூறினார். அவருக்கு இருநூறு ரூபாய் அபராதமும் தவறினால் ஒருவார வெறுங்

காவலும் விதிக்கப்பட்டது. இரண்டாவது எதிரி சீதாலட்சுமி அம்மாள் விடுதலை செய்யப்பட்டாள்.

## 60க்கு 50 தான் ஜோடி!

ஸேத் கோவிந்த தாஸ் மத்திய சட்டசபையில் கொண்டுவரும் சீர்திருத்த மசோதா பொருத்தமில்லாத மணங்களைத் தடுக்கும் நோக்கங் கொண்டதாகும். இந்த மசோதாப்படி, 30 வயதுக்கு மேற்பட்ட எந்த ஆடவனும், தன்னை விடப் பத்து வயதுக்கும் அதிகமாகக் குறைந்த வயதினையுடைய எந்தப் பெண்ணையும் மணந்தால் அது குற்றமாகக் கருதப்பட்டு, ஒருவருடத் தண்டனை அல்லது ரூ 1000க்கு அதிகப்படாத அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம். இச்சட்டத்திற்கு விரோதமாக நடக்கும் கல்யாணங்களை நடத்திவைக்க ஒப்புக்கொள்ளும் புரோகிதருக்கு ஆறு மாதத்தண்டனை அல்லது 1000 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். 30 வயதுக்கு மேற்பட்ட வயதுடையவருக்கு மைனர் பெண்ணைக் கல்யாணம் செய்துவைக்கும் ஒரு கார்டியனுக்கு இரண்டுவருஷச் சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

## ராம் மோகனர் விழா

ராஜா ராம்மோகனராயின் 106 வது ஆண்டு விழா காரைக்குடி மாதர் மறுமண சகாய சங்கத்தின் சார்பில் ஸெப்டம்பர் 27-உ செக்காலையிலுள்ள சுகாதார நிலயத்தில், முனிசிபல் கமிஷனர் ஸ்ரீ. எஸ். ராமதாஸ் நாயுடு அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமான்கள் ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார், சா. கணேசன், பழ. நாச்சியப்ப செட்டியார், தி. நாராயணய்யர், சொ. முருகப்பா ஆகியோர் காலஞ்சென்ற ராஜா ராம்மோகனர் சிறப்பாக இந்திய மாதர்கட்கும், பொதுவாக நம் நாட்டுக்கும் செய்துள்ள அரிய தொண்டைப் பாராட்டிப் பேசினர்.

## பிராமணர் - ரெட்டி கலப்பு மணம்

ஒரு பிராமணர் சூத்திரப் பெண்ணை மணந்துகொண்டால் அது செல்லுபடியாகுமா என்று ஏற்பட்ட வழக்கில் நெல்லூர் ஜில்லா ஜட்ஜி தீர்ப்பளித்திருக்கிறார். சென்னை ஹைக்கோர்ட்டைப் பொறுத்தவரையில் பிராமணர் சூத்திரப் பெண்ணை மணப்பது செல்லத் தக்கதானென்றும், மாஜி ஜஸ்டிஸ் கனம் ஸர் வெங்கட சுப்பாராவின் ஜட்ஜ் மென்று இதற்கு அத்தாட்சியாகு மென்றும் ஜட்ஜ் தீர்ப்புக் கூறி வாதியான ரெட்டிப் பெண்ணுக்கும் அவள் குழந்தைகளுக்கும், அவள் புருஷனாக இருந்து காலஞ்சென்ற ஒரு பிராமணருடைய சொத்திலிருந்து ஜீவனும்சம் கொடுக்கும்படி டிக்ரி பிறப்பித்துள்ளார்.

## சைக்கிள் சாம்பியன்

கிளாஸ்கோ நகரைச் சேர்ந்த மிஸ். ஈவ்லின் ஹாமில்டன் எனும் மங்கை சைக்கிள் ஓட்டுவதில் வெகு திறமைசாலி. நூறு தினங்களில் சேர்ந்தாற்போல் 10000

மைல் சைக்கிள் சவாரி செய்திருக்கிறாளென்றால், அவளது சாமர்த்தியத்தைப் பற்றிக் கேட்பானேன்? அவளைப்போல சைக்கிள் விடுபவர் உலகிலேயே வேறு இல்லையாம்.

## கொச்சியில் ஸ்திரீ வக்கீல்

ஸ்ரீமதி கார்த்தியாயினி அம்மாள் பி.ஏ., பி.எல்., கொச்சி சமஸ்தான ஹைக்கோர்ட்டில் வக்கீலாகப் பதிவு செய்திருக்கிறார். கொச்சியில் இவரே முதலாவது ஸ்திரீ வக்கீல்.

## தேவதாசிகள் ஆதரவு

சென்னை சட்ட சபையின் பரிசீலனையிலிருக்கும் தேவதாசிகள் மசோதாவை வரவேற்பதாகக் கும்பகோணத்தில் நடைபெற்ற தேவதாசிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமதி சிவபாக்கியத்தம்மாள் தலைமை வகித்தார். பெண்களைக் கோயில்களுக்குப் பொட்டுக்கட்டும் வழக்கத்தை உடனே நிறுத்த வேண்டுமென்று தீர்மானிப்பதாயும், சங்கீத ஆசிரியைகளாக தேவ தாசிகளை நியமிக்கும்படி சென்னை கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்வதாயும், தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன.

## பொட்டுக் கட்டுதலை ஒழிக்க

கோவில்களில் இந்துப் பெண்களுக்குப் பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிக்க வேண்டுமென்று சென்னை சட்டசபையில் ஒரு மசோதா கொண்டுவரப் போவதாக மிஸ் அம்மண்ண ராஜா சென்னை அஸம்பிளிக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறான். அதேமாதிரி ஒரு மசோதா கொண்டுவரப் போவதாக டாக்டர் லட்சுமி அம்மாளும் ஏற்கனவே நோட்டீஸ் கொடுத்திருக்கிறாள்.

## சாந்தூரில் தீர்மானம்

சாந்தூர் சமஸ்தானச் சட்ட சபையில் கேப்டன் தேஷ்முக் ஒரு தீர்மானங்கொண்டுவந்தார். சமஸ்தானத்திலுள்ள கோயில்களில், பெண்களை தேவ தாசிகளாகப் பொட்டுக் கட்டும் வழக்கத்தைத் தடுக்கச் சட்டம் செய்யுமாறு கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்வது அத் தீர்மானம். ஏகமனதாக அது நிறைவெய்தியது. சமஸ்தானத்தில், விபசாரத்தொழில் நடத்துவதைக் கண்டிப்பதற்குச் சட்டமியற்றுமாறு கொண்டுவந்த மற்றொரு தீர்மானமும் நிறைவேறியிருக்கிறது.

## சட்டமறுப்பில் பெண்கள் தலைமை

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி கோரி சட்ட மறுப்பு இயக்கம் வெகு தீவிரமாகவும் கட்டுப்பாடுடனும் நடைபெற்று வருகிறது. தலைவர்களும் தொண்டர்களும் ஏராளமாகத் துணிந்து சிறைசென்று வருகின்றனர். இவர்களில் பள்ளிமாணவிகள் உள்பட பல பெண்களும் கலந்து உழைத்து வருகின்றனர். சமஸ்தானக் காங்கிரஸுக்கு ஐந்தாவது தலைவராக ஸ்ரீமதி குருவில்லா சட்டமறுப்பில் ஈடுபட்டு தண்டனையும்பெற்று இப்பொழுது சிறைவாசம் செய்துவருகின்றார். அவரைப் பின்தொடர்ந்து மற்றொரு பெண்மணி ஸ்ரீமதி பந்தளம் ராமன்பிள்ளை எட்டா

வது தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## நம்பூதிரிப் பெண்கள்

கொச்சி சமஸ்தானத்தில் நம்பூதிரிப் பிராமணர்கள் தொகை 5000; இவர்களில் 3000 பேர் பெண்கள். நம்பூதிரிகளுக்குள் குடும்பத்தில் மூத்தவர் மட்டுமே, அந்த சமூகத்தில் கலியாணம் செய்து கொள்ளலாம் என்ற வழக்கமிருந்து வருகிறது. இதனால் அந்தசமூகத்தில் ஏராளமானபெண்கள், கன்னிகளாகவே வாழ்க்கை முழுதும் கழித்து வருகிறார்கள். சமீபத்தில் கொச்சி சட்டசபையில் ஒரு மசோதா கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. குடும்பத்திலுள்ளஅத்தனைபேரும் கல்யாணஞ் செய்ய அனுமதிப்பது மசோதாவின் நோக்கம். இதற்கு மகாராஜா இன்னும் சம்மதமளிக்காததால் சட்டமாக அமுலில் வரவில்லை. சமீபத்தில், 78 நம்பூதிரிகள் ஒரு கோஷ்டியாக மகாராஜாவைப் பேட்டிகண்டு மசோதாவுக்குச் சம்மதமளிக்கும்படி கேட்டிருக்கிறார்கள். கோரிக்கையை அனுதாபத்துடன் கவனித்து வேண்டியதைச் செய்வதாக மகாராஜா வாக்களித்திருக்கிறார்.

## பெண் அபேட்சகருக்குப் போட்டியில்லை

ஸ்ரீமதி அன்னத்தாய் துரைசாமி திருநெல்வேலி நகரசபைக்குப் போட்டி யின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

## விதவா விவாகம்

சென்னை விதவா விவாக சபையின் ஆதரவில், அக்டோபர் 11ல், சென்னையிலுள்ள ஆர்யசமாஜக் கட்டிடத்தில் ஆந்திரப் பிராமண வகுப்பைச் சேர்ந்த விதவை (நெல்லூர்) ஸ்ரீமதி சரோஜம்மாவுக்கும் (22 வயது), ஆந்திர பிராமண வகுப்பைச் சேர்ந்த (கடப்பை) ஸ்ரீமான் எம். சுப்பையாவுக்கும் (32வயது) விவாகம் நடைபெற்றது. விவாகத்தை பண்டிட் எம். சுந்தரம் சமாஜ முறைப்படி நடத்திவைத்தார்.

## ஸ்திரீ டிக்கட் கலக்டர்கள்

காம்கானில் (பீரார்) சமீபத்தில் நடைபெற்ற மாதர் மகாநாட்டில், பெண்களுடைய சௌகரியத்தை முன்னிட்டு, ரயில்வேக்களில் ஸ்திரீ டிக்கட் கலக்டர்களை நியமிக்க வேண்டுமென்றும், தொழிற்சாலைகளில் அவர்களுக்கு உத்யோகங்கள் வழங்க வேண்டுமென்றும், டாக்டர் தேஷ்முக் கொண்டுவந்திருக்கும் விவாக ரத்து மசோதாவை ஆதரிப்பதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

## ஸ்ரீமதி முத்துலட்சுமி ரெட்டி அறிக்கை

சென்னை சட்டசபையில் கொண்டுவந்திருக்கும் தேவதாசிகள் மசோதாவை தேவதாசிகள் கூட்டங்கூடி எதிர்த்திருப்பதைப் பொருட்படுத்தாது, (மதுவிலக்கு விஷயத்தில் உரிமை கொண்டாடுவோரைக் கலந்தாலோசிக்காமல் எப்படி சர்க்கார் சட்டஞ்செய்தார்களோ அதேமாதிரி இவ் விஷயத்திலும்) சர்க்கார் தாமதமின்றி அதைச்சட்டமாக நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்வதாக டாக்டர் எஸ். முத்துலட்சுமி ரெட்டி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

# சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.

"மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு சகாயம்.

## கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவு படக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி—யுக்தி— அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

## மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்து விட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

## சொர்ணவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந் துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையராக்கப்படும் கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபாற் செலவு வேறு.

## அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனுலேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் டசுமாத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனிமையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபாற் செலவு வேறு

**மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.**

REGD. No. M. 3603.

# சிறந்த புத்தகங்கள்.

## மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்தபாடல் புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன. இலக்கிய பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன. 64-பக்கமுள்ள இப்புத்தகத்தின் விலை இரண்டணாதான். தபாற்கூலி வேறு.

## ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வள முரைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொறுக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணா அரை. மொத்தமாக வாங்கினால் விலை சகாயமாகத் தரப்படும். தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமணம்.

இப்பெயர் கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப் பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிறார்கள். உதாரணமாகக் கூறப்படும் எழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0 தபாற்சிலவு வேறு.

## காசில்லாமல் உபதேசம்.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பரமும் அனாவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங்கள் இதில் விளக்கப்பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. விலை அணா ஒன்று. தபாற் கூலி வேறு.

## மாதர் மறுமணம் பென்ஸில்.

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில். நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப் பெற்றது.

| | |
|---|---|
| விலை பேன்சில் 1-க்கு | 0—0—6 |
| டஜன் 1-க்கு | 0—5—0 |
| குரோஸ் 1-க்கு | 3—6—0 |

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.
Editor: M. Maragathavalli.